தினமணி

## நெல்லின் ஈரப்பதத்தை 22 சதமாக உயர்த்த விவசாயிகள் கோரிக்கை

First Published : 26 Jan 2010 10:11:46 AM IST

சீர்காழி, ஜன. 25: அறுவடை செய்த நெல்லின் ஈரப்பதத்தை 22 சதமாக உயர்த்த அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அவர்களுக்கு தமிழக அரசுக்கு விடுத்துள்ள கோரிக்கை:

கடந்த ஆண்டு இறுதியில் கடற்கரை ஓர மாவட்டங்களில் சுமார் 15 நாள்கள் தொடர்ந்து பலத்த மழை பெய்தது. இதில் நாகை மாவட்டம், சீர்காழியில்தான் அதிகளவு மழை பெய்தது. இதன் விளைவாக பல்வேறு இடங்களில் வாய்கால், ஆறுகளில் உடைப்பு ஏற்ப்பட்டது.

கடைமடைப் பகுதியான சீர்காழி, கொள்ளிடம், வைத்தீஸ்வரன்கோவில், கொண்டல்,திருமுல்லைவாசல், திருவெண்காடு உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட பகுதிகளில்

பயிரிடப்பட்ட சம்பா நெல் பயிர்கள் கதிர் வரும் நிலையில் மற்றும் அறுவடைக்கு தயாரான நிலையில் தண்ணீரில் முழ்கின.

இதை அறுவடை செய்ய ஆள்களும் இல்லாமல், இயந்திரம் கொண்டுதான் அறுவடை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்படி அறுவடை செய்த நெல்லின் ஈரப்பதம் 22 சதத்தை தாண்டியது. ஆனால், அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் 17 சதம் உள்ள நெல்லை மட்டும் எடுத்து கொள்கின்றனர்.

எனவே, விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை விற்க முடியாமல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முளைவிட்ட நெல்லுடன் இழப்பீடு கோரி விவசாயிகள் மனு

First Published : 26 Jan 2010 10:07:50 AM IST

தஞ்சாவூர், ஜன. 25: தஞ்சாவூர் மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழையின் காரணமாக தண்ணீரில் மூழ்கி நெல்கள் முளைவிட்ட நிலையில் இழப்பீடு கேட்டு மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

தஞ்சாவூரில் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். சண்முகம் தலைமையில் மக்கள் குறைதீர் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் பாபநாசம் தெற்குப் பகுதி, திருமண்டங்குடி, திருமானூர், கள்ளப்பெரம்பூர், தென்னங்குடி, பிள்ளையார்நத்தம், சீராலூர், சக்கரசாமந்தம், களிமேடு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் அண்மையில் பெய்த மழையில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் தண்ணீரில் மூழ்கியதில் விளைந்து முளைவிட்ட நிலையில் பயிர்களை அறுவடை செய்து கொண்டு வந்து காட்டி இழப்பீடு கேட்டு மனு அளித்தனர்.

மனுவில், சம்பா சாகுபடியில் ஏக்கருக்கு ரூ. 11,000 வரை செலவு செய்துள்ளோம்.

பயிர் பூ பூக்கும் தருணத்திலும், நெல் விளைந்த தருணத்தில் மழை பெய்ததால் மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு செலவுத் தொகையும், இழப்பீட்டுத் தொகையும் வழங்க வேண்டும் என கோரிக்கைவிடுத்தனர்.

இதுதவிர கல்விக் கடன், முதியோர் உதவித்தொகை, இலவச மனைப் பட்டா உள்ளிட்டவற்றைக் கோரி மக்கள் மனு அளித்தனர்.

### மேட்டூர் நீர்மட்டம் 78.10 அடி

First Published : 27 Jan 2010 12:45:42 AM IST

சேலம், ஜன. 26: மேட்டூர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 78.10 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,096 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 8,005 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணை நீர் இருப்பு 40.08 டி.எம்.சி.

### மரபணு கத்தரிக்காய் விதைகளை அனுமதிக்க மாட்டோம் கிராம சபைக் கூட்டங்களில் தீர்மானம்

First Published : 27 Jan 2010 03:26:51 AM IST

திருவண்ணாமலை, ஜன. 26: கலசப்பாக்கம் ஒன்றியத்தில் பல்வேறு ஊராட்சிகளில் நடந்த கிராம சபைக் கூட்டங்களில், மரபணு கத்தரிக்காய் விதைகளை அனுமதிக்க எதிர்ப்பு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர்.

குடியரசு தினத்தை முன்னிட்டு பல்வேறு ஊராட்சிகளில் கிராம சபைக் கூட்டங்கள் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. கலசப்பாக்கம் கிராமத்தில் ஊராட்சித் தலைவர் ஏ.சிவக்குமார், பூண்டியில் தலைவர் கா.பவானி, பில்லூரில் தலைவர் வசந்தா மாசிலாமணி, மேட்டூரில் மங்கையம்மாள் முனுசாமி, காலூரில் பாண்டியன், நீப்பத்துறையில் வெங்கடேசன், பழங்கோயில் ஊராட்சியில் எஸ்.ராஜசேகரன், அரியூர் ஊராட்சியில் ஏ.ஆர்.குமார் ஆகியோர் தலைமையில் கிராம சபைக் கூட்டங்கள் நடந்தன.

அவற்றில் முக்கிய தீர்மானமாக மரபணு கத்தரிக்காய் விதைகளை அனுமதிக்க மாட்டோம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டு மரபணு கத்தரிக்காய் விதையில் ஏற்படும் தீமைகள் குறித்து விவரித்தனர்.

அடிஅண்ணாமலை

திருவண்ணாமலை ஒன்றியம் அடி அண்ணாமலை கிராமத்தில் நடந்த கிராம சபைக் கூட்டத்துக்கு ஊராட்சித் தலைவர் சி.பாபு தலைமை தாங்கினார்.

கிராம வளர்ச்சி குறித்தும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், வாழ்ந்து காட்டுவோம் திட்ட பயனாளிகள் தேர்வு, வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்பவர்கள் பட்டியல் குறித்து கூட்டத்தில் விவாதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஒன்றிய ஆணையர் எத்திராஜுலு, ஊராட்சி உதவியாளர் ஜீவா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**சுற்றுச்சூழலைக் காக்க மரங்கள் அவசியம் - ஆட்சியர்**

First Published : 27 Jan 2010 04:31:30 AM IST

விருதுநகர், ஜன. 26: விருதுநகர் மாவட்டம், வச்சக்காரப்பட்டியில் ரூ.22 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் செய்யப்பட்டுள்ளது. இக்கிராமத்துக்கு உத்தமர் காந்தி விருது கிடைக்கும் விதத்தில், இவ்வூர் மக்கள் செயல்பட ஆட்சியர் சிஜி தாமஸ் வைத்யன் கேட்டுக் கொண்டார்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் அவர் பேசுகையில், வச்சக்காரப்பட்டி ஊராட்சியில் செய்யப்பட்டுள்ள திட்டப்பணிகள் குறித்து விளக்கினார்.

மேலும் விருதுநகர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் ஒவ்வொரு வீட்டிலும் வெவ்வேறு மர வகைகளை வளர்பபது அவசியமாகும். இதன் மூலம் சுற்றுச்சூழலைக் காக்க முடியும். மழை வளம் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. மரக்கன்றுகள் நடுவதில் ஊராட்சி மன்றத் தலைவர்கள், மாணவ,மாணவியர் அக்கறை காட்ட வேண்டும். இத்தகைய முயற்சிக்கு பொதுமக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார் ஆட்சியர்.

கூட்டத்தி6ல பயிற்சி ஆட்சியர் வெங்கடேஷ்குமார், உதவி இயக்குநர் வீரையா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ராஜ இராஜேஸ்வரி, வட்டார வளர்ச்சி அலுவலர் சையது அகமது, ஊராட்சி மன்றத் தலைவர் அனந்தராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சித்தாரில் செம்மை நெல் சாகுபடி வயல் விழா**

First Published : 27 Jan 2010 01:17:49 AM IST

பவானி, ஜன. 26: பவானியை அடுத்த சித்தாரில் செம்மை நெல் சாகுபடி வயல் விழா திங்கள்கிழமை நடைபெற்றது

÷சித்தார் குணசேகரன் தோட்டத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு கேசரிமங்கலம் சிற்றூராட்சித் தலைவர் கந்தசாமி தலைமை வகித்தார். அம்மாபேட்டை வட்டார ஆத்மா ஆலோசனைக் குழுத் தலைவர் தனபால் வரவேற்றார்.

÷ஈரோடு வேளாண்மை இணை இயக்குநர் கோபால், துணை வேளாண்மை இயக்குநர்கள் முத்துசாமி, மனோகரன், அக்காஸ் இணைச் செயலர் உதயகுமார், இயற்கை விவசாய ஆலோசகர் பழனியப்பன், அம்மாபேட்டை வேளாண்மை உதவி இயக்குநர் திருமூர்த்தி ஆகியோர் செம்மை நெல் சாகுபடி குறித்து விளக்கிப் பேசினர்.

÷காடப்பநல்லூர் செம்மை நெல் சாகுபடியாளர் மாணிக்கம் தனது அனுபவம் குறித்து எடுத்துரைத்தார். இதில், அம்மாபேட்டை வட்டாரத்தைச் சேர்ந்த நெல் சாகுபடி விவசாயிகள் கலந்து கொண்டனர். நெல் அறுவடையின் போது நேரடியாக விவசாயிகள் கண்டு சாகுபடி அதிகரிப்பு குறித்து தெரிந்து கொண்டனர்.

**அனைத்து வகையான மரபணு மாற்ற விதைகளுக்கும் தடை விதிக்க வேண்டும்**

First Published : 26 Jan 2010 09:43:49 AM IST

திருவாரூர், ஜன. 25: அனைத்து வகையான மரபணு மாற்ற விதைகளுக்கும் தமிழகத்தில் தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார் மனிதநேய மக்கள் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் எம்.எச். ஜவாஹிருல்லா.

மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை மாநாடு திருவாரூரில் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றது. மாநாட்டுக்கு மாவட்டச் செயலர் எம். முஜிபுர் ரஹ்மான் தலைமை வகித்தார்.

மாநாட்டில் மனிதநேய மக்கள் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் எம்.எச். ஜவாஹிருல்லா கலந்து கொண்டு பேசியது:

பாரம்பரியப் பயிர்களையும், மண்ணையும், மக்களையும் அழிப்பதற்கு வழிவகுக்கும் மரபணு மாற்ற விதைகள் தமிழகத்துக்குள் நுழைவதற்கு உடனடியாக தடை செய்ய வேண்டும்.

மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவாரின் சொந்த மாநிலமான மகாராஷ்டிரத்தில் மான்சாண்டோ நிறுவனத்தின் பி.டி. பருத்தி விதைகளை பயிர் செய்த பல விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். அதே நச்சுக் கிருமியை கத்திரிக்காயில் புகுத்தி, தரமான விதை என்கிறார்கள். எனவே, அனைத்து பி.டி. விதைகளுக்கும் தமிழகத்தில் தடை விதிக்க வேண்டும்.

தில்லியில் இயங்கும் சென்டர் பார் மீடியா ஸ்டடீஸ் என்ற நிறுவனம் வாக்குக்கு பணம் அளிப்பது குறித்து நாடு முழுவதும் 2008-ம் ஆண்டில் ஓர் ஆய்வை நடத்தியது. இந்த ஆய்வில் நாட்டிலேயே கர்நாடகத்துக்கு அடுத்ததாக தமிழகத்தில்தான் அதிக அளவில் வாக்குகள் பணம் கொடுத்து வாங்கப்படுகின்றன எனக் கண்டறிந்தது. ஆனால், இந்த ஆய்வை 2009-ல் நடத்தியிருந்தால், தமிழகம்தான் முதன்மை பெற்றிருக்கும். இத்தகைய அவல நிலையைப் போக்கி அரசியலை தூய்மைப்படுத்தி, உண்மையான ஜனநாயகம் மலர

அரசியல் கட்சிகள் பாடுபட வேண்டும்.

25 ஆண்டுகளாக இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு வரும் இந்திய மீனவர்களைப் பாதுகாக்க உறுதியான நடவடிக்கையை மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும். இந்திய மீனவர்களை சுட்டுக் கொலை செய்யும் இலங்கை கடல்படையினர் மீது கொலை வழக்குப்பதிவு செய்ய வேண்டும். பாதிக்கப்படும் மீனவர் குடும்பங்களுக்கு ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கி, அவர்களது குடும்பத்தில் ஒருவருக்கு அரசுப் பணி வழங்க வேண்டும்.

மறைந்த வி.பி. சிங் பிரதமராக இருந்த போது இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் மத்திய அரசுப் பணிகளில் இடஒதுக்கீட்டை கிடைக்கச் செய்து, சமூக நீதியை நிலை நாட்டினார். அதேபோல, ரங்கநாத் மிஸ்ரா ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் இந்த இடஒதுக்கீடுகளை வழங்கி, தனது தேர்தல் வாக்குறுதியை காங்கிரஸ் அரசு நிறைவேற்ற வேண்டும்.

தூய்மையான அரசியலை எதிர்நோக்கித்தான் அரசியலை மாற்றியமைப்போம், அதிகாரத்தில் பங்கெடுப்போம் என்ற முழக்கத்துடன் மனிதநேய மக்கள் கட்சி அரசியல் இயக்கமாக மக்கள் சேவையை முதன்மையாகக் கொண்டு செயலாற்றி வருகிறது. இதற்கு அனைத்து தரப்பு மக்களும் ஆதரவளிக்க வேண்டும் என்றார் ஜவாஹிருல்லா.

மாநாட்டில் கட்சியின் பொதுச் செயலர் பி. அப்துல் சமது, பொருளாளர் எஸ்.எஸ். ஹாரூண் ரஷீது, துணைப் பொதுச் செயலர் என். தமீமுன் அன்சாரி, அமைப்புச் செயலர் எஸ்.எம். ஜெய்னுல் ஆபிதீன், மாவட்ட துணைச் செயலர்கள் இ. பஜ்லுல் ஹக், எம்.ஏ. ஜெகபர் அலி, மாவட்டச் செயற்குழு உறுப்பினர் கே.எச். முகமது நூர்தீன், மாவட்ட இளைஞரணிச் செயலர் ஏ. கலிலுர் ரஹ்மான் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றுப் பேசினர்.

கட்சியின் மாவட்டச் செயற்குழு உறுப்பினர் தாஜிதீன் வரவேற்றார். மாவட்டப் பொருளாளர் முகமது ஹலீம் நன்றி கூறினார்.

## 9 மாதங்களில் 176.32 லட்சம் டன் சரக்கு போக்குவரத்து

First Published : 27 Jan 2010 05:00:18 AM IST

தூத்துக்குடி, ஜன.26: தூத்துக்குடி துறைமுகத்தில் கடந்த 9 மாதங்களில் 176.32 லட்சம் மெட்ரிக் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளதாக, அதன் தலைவர் கு.ஜெ. ராவ் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

தூத்துக்குடி துறைமுகம் சார்பில் குடியரசு தின விழா, துறைமுக பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. துறைமுக சபைத் தலைவர் கு.ஜெ. ராவ் தேசியக் கொடியேற்றி வைத்து, மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர், துறைமுக தீயணைப்புப் படையினர், துறைமுக பள்ளி தேசிய மாணவர் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

பின்னர் அவர் ஆற்றிய உரை: இன்றைய பொருளாதார நெருக்கடியிலும் தூத்துக்குடி துறைமுகம் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. டிசம்பர் 31ஆம் தேதியுடன் முடிவடைந்த கடந்த 9 மாதங்களில் தூத்துக்குடி துறைமுகத்தில் 176.32 லட்சம் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளன. இது முந்தைய ஆண்டில் இதே காலக்கட்டத்தில் கையாளப்பட்ட சரக்குகளைவிட 4.09 சதவீதம் அதிகமாகும்.

மேலும், மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகம் இத் துறைமுகத்திற்கு விதிக்கப்பட்ட இலக்கைவிட இது 7.91 சதவீதம் அதிகமாகும்.

துறைமுகத்தின் நுகர்வோர் சார்புக் கொள்கை காரணமாக கப்பல் நங்கூரமிடும் கடல் பகுதியில் சரக்குகள் கையாள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் துறைமுகத்தின் சரக்கு கையாளும் திறன் அதிகரித்துள்ளது. நீண்ட இடைவெளிக்குப் பின் அண்மையில் தூத்துக்குடி துறைமுகத்தில் இரும்புத்தாது இறக்குமதி செய்யப்பட்டது. இது துறைமுகத்தின் வளர்ச்சிக்கு மற்றொரு உதாரணம்.

துறைமுகத்தின் பாதுகாப்புக்குத் தேவையான அனைத்து அதிநவீன வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. துறைமுக வரலாற்றில் முதன்முறையாக மோப்பநாய் பிரிவு பாதுகாப்பில் சேர்க்கப்பட்டுள்ளது என்றார் அவர்.


தொடர்ந்து மோப்ப நாய் படையினர் வெடிகுண்டுகளைக் கண்டுபிடிப்பது உள்ளிட்ட பல்வேறு ஒத்திகைகளைச் செய்து காட்டினர். துறைமுக பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முன்னதாக, சிறப்பாக பணியாற்றிய மத்திய தொழில் பாதுகாப்புப் படை வீரர்கள், துறைமுக விளையாட்டு வீரர்களுக்கு பதக்கங்களை துறைமுக சபைத் தலைவர் கு.ஜெ. ராவ் வழங்கினார். ஒத்திகை நடத்திய மோப்பநாய் படையினர் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்திய பள்ளி மாணவ, மாணவியருக்கு பரிசுகளை துறைமுக துணைத் தலைவர் அ. சுப்பையா வழங்கினார்.

விழாவில், சிறப்பு விருந்தினராக ஒரிசா மாநில மின்வாரியத்தின் முன்னாள் தலைவர் எம்.ஒய். ராவ் கலந்துகொண்டார். துறைமுக அனைத்து துறை அதிகாரிகள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## ஏறுமுகத்தில் ஏற்றுமதி - தொடருமா?

எஸ். கோபாலகிருஷ்ணன்First Published : 23 Jan 2010 01:09:00 AM IST



பதிமூன்று மாதங்கள் தொடர்ந்து சரிவில் இருந்த ஏற்றுமதி, கடந்த இரண்டு மாதங்களாக ஏறுமுகம் கண்டுள்ளது. சரிவுக்கான காரணம் சர்வதேசப் பொருளாதார நெருக்கடி என்பது வெளிப்படை. ஆனால் அது நமது பொருளாதாரத்தை நேரடியாகப் பாதிக்கிறது என்பதுதான் முக்கியம். எனவே ஏற்றுமதி தொடர்ந்து அதிகரிப்பதற்கான வழிவகைகளை நாம் கண்டறிய வேண்டியது அவசியமாகிறது.

நல்லவேளையாக, நவம்பர் மாதம் 19 சதவீதமும், டிசம்பர் மாதம் 10 சதவீத அளவிலும் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. டிசம்பரில் நமது ஏற்றுமதியின் மதிப்பு 1,500 கோடி டாலராக இருந்தது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இன்னமும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்சி அடையவில்லை. அமெரிக்காவைப் பொறுத்தவரை அது எப்போது மீட்சி அடையும் என்று உறுதியாகக் கூறுவது சாத்தியமல்ல என்கிறார்கள் வல்லுநர்கள்.

இந்நிலையில், நமது ஏற்றுமதி அதிகரிக்க வேண்டுமெனில், கணிசமாக இறக்குமதி செய்யக்கூடிய இதர நாடுகளை நாம் தேடிப் பிடிக்க வேண்டும். இதற்கு நமது ஏற்றுமதியாளர்களுக்கு மேலும் சலுகைகள் வழங்க வேண்டும். இதைக் கருத்தில்கொண்டு, மத்திய அரசு அண்மையில் 500 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய சலுகைகளை அறிவித்துள்ளது. இத்திட்டம் ஜனவரி 13-ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது. பாரம்பரியமாக இந்தியா ஏற்றுமதி செய்திடும் நாடுகளைத் தவிர, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்பவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.

ஏற்றுமதி செய்வதில் உலக நாடுகளில் சீனாதான் முதல் இடத்தில் உள்ளது. அந்தச் சீனாவுக்கே, இந்தியாவின் ஏற்றுமதி சமீபகாலமாக அதிகரித்துள்ளது. இது மேலும் அதிகரிக்க வேண்டும் என்பதே புதிய சலுகைத் திட்டத்தின் நோக்கம்.

பொறியியல் மற்றும் மின்னணு பொருள்கள், ரசாயனம், ரப்பர், பிளாஸ்டிக் பொருள்கள், அட்டைப் பெட்டிகள், பதப்படுத்தப்பட்ட கோழிமுட்டைத்தூள், விவசாயம் மற்றும் பழத் தோட்டங்களுக்குத் தேவையான கருவிகள், தையல் மெஷின், "வெல்டிங்' கருவிகள் ஆகிய பொருள்களின் ஏற்றுமதி புதிய சலுகைகள் மூலம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.

இப்போது, இந்தியத் தொழிற்சாலை உற்பத்திப் பொருள்களின் உற்பத்தி விகிதம் அதிகரித்துள்ளது. நடப்பு நிதி ஆண்டின் முதல் 3 மாதங்களில் உற்பத்தி வளர்ச்சி விகிதம் வெறும் 3.8 சதவீதம் மட்டுமே. அடுத்த 3 மாதங்களில் வளர்ச்சி விகிதம் 9.8 சதவீதமாக உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கடந்த ஆண்டைவிட, இந்த ஆண்டில் தொழிற்சாலை உற்பத்திப் பொருள்கள் 11.3 சதவீதம் அதிகரிக்கும் என்று ஏற்கெனவே திட்டக் குழு கணித்திருந்தது. அந்தக் கணிப்பு கைகூடும் என்றே தோன்றுகிறது. இதுவும் ஏற்றுமதி அதிகரிப்புக்கு ஏதுவாக அமைந்துள்ளது.

இந்நிலையில், பொருளாதார மந்த நிலையைச் சமாளிக்க உதவும் வகையில், மத்திய அரசு சில புத்துயிர் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்களை அவசரப்பட்டு நிறுத்திவிடக் கூடாது என்று தேசிய

பொது நிதி மற்றும் கொள்கைகள் இன்ஸ்டிடியூட்டின் இயக்குநர் கோவிந்த ராவ் மற்றும் மூத்த பொருளாதார வல்லுநர் நிதின் தேசாய் ஆகியோர் நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜியை அண்மையில் நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளனர்.

இதுதவிர, சில குறிப்பிட்ட துறைகளில் ஏற்றுமதி வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படுகின்ற செயல்திட்டங்களும் தொடர வேண்டும். உதாரணமாக, ஜவுளித்துறையில் செயல்படுத்தப்படும் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டத்தைக் குறிப்பிடலாம். இத்திட்டத்தைச் செயல்படுத்த இந்த ஆண்டு ரூ. 4,500 கோடி நிதி ஒதுக்க வேண்டும் என்று இந்திய ஜவுளித் தொழில் கூட்டமைப்பு மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது. இதில் ரூ. 3,000 கோடி இந்த ஆண்டுக்காகவும், மீதம் ரூ. 1,500 கோடி ரூபாய் கடந்த ஆண்டு துண்டு விழுந்ததைச் சரிசெய்வதற்காகவும் தேவைப்படுகிறது என்று கூட்டமைப்பு விளக்கம் அளித்துள்ளது.

மேற்கூறிய திட்டம் ஜவுளி ஏற்றுமதிக்கு உந்து சக்தியாக இருப்பதால், புதிய பட்ஜெட்டில் இதற்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வது அவசியம்.

இதைப்போல், தோல் உற்பத்தி, ஆபரணக் கற்களை பட்டை தீட்டுதல், உணவு பதனிடும் தொழில், கைவினைப் பொருள்கள், வேளாண் பொருள்கள், காபி, தேயிலை, முந்திரி, சணல், நறுமணப் பொருள்கள், கடல் உணவுப் பொருள்கள் ஆகியவற்றின் ஏற்றுமதிகளுக்கு இப்போது வழங்கும் சிறப்பு மானியம் மற்றும் ஊக்கத்தொகை தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

சிறு மற்றும் குறுந்தொழில்கள் ஏற்றுமதி வளர்ச்சிக்கு முதுகெலும்பாக உள்ளன. இவற்றின் பங்களிப்பு 40 சதவீதம். எனினும் இவை எதிர்கொண்டுள்ள இடர்பாடுகளை நீக்குவதற்கு மத்திய, மாநில அரசுகள் முனைப்புக் காட்டவில்லை. மாறாக, சிறு மற்றும் குறுந்தொழில்கள் கண்டுகொள்ளப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்கிறது. என்னதான் பொதுவான ஏற்றுமதிக்குச் சலுகைகளை மத்திய அரசு வழங்கினாலும், சிறு மற்றும் குறுந்தொழில்கள் செழிக்கவில்லை எனில், ஏற்றுமதிக்கான இலக்கை எட்டுவது சாத்தியம் அல்ல. எனவே, மாநில அரசுகள் இதுவிஷயத்தில் பிரத்யேக கவனம் செலுத்துவது உடனடித் தேவை.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, முதல் முறையாக ஏற்றுமதி செய்ய முன்வரும் துடிப்பான இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் புதிய சிறப்புத் திட்டங்களை அறிமுகம் செய்வது நல்ல பலனைத் தரும். நாட்டில் சமீபகாலமாக, ஏற்றுமதித் தொழிலில் புதிதாக ஆர்வமுடன் ஈடுபட முயலும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அவர்களுக்குச் சரியான தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை சரியான நேரத்தில் வழங்கி உற்சாகப்படுத்த வேண்டும்.

ஏற்கெனவே துறை வாரியாக முப்பதுக்கும் அதிகமான ஏற்றுமதி வளர்ச்சி வாரியங்கள் நாடு முழுவதிலும் செயல்படுகின்றன. புதிய ஏற்றுமதியாளர்கள் இவற்றில் உறுப்பினர்களாகி தேவையான தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை எளிதில் பெற்றுக் கொள்ளலாம். உலகம் முழுவதும் உள்ள லட்சக்கணக்கான இறக்குமதியாளர்களின் முகவரிகள் அடங்கிய, புதுப்பிக்கப்பட்ட, டைரக்டரிகளை இந்த வாரியங்களிலிருந்து பெற்றுப் பயன் அடைய வேண்டும்.

அதேபோல், புதிய ஏற்றுமதியாளர்கள் தங்களைப் பற்றிய விவரங்களை இதுபோன்ற டைரக்டரிகளில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இதன் மூலம், உலகம் முழுவதிலும் இயங்குகிற வர்த்தக சபைகள், அரசு தூதரகங்கள், ஏற்றுமதி-இறக்குமதி வளர்ச்சிக் கழகங்கள், நூலகங்கள் ஆகியவற்றின் மூலம் அந்தந்த நாடுகளில் உள்ள இறக்குமதியாளர்களின் கவனத்தை ஈர்க்க முடியும். இதன் வாயிலாக, வெளிநாட்டு "ஆர்டர்கள்' புதிய ஏற்றுமதியாளர்களைத் தேடி வரும்.

உலகில் யார், யார் எந்தப் பொருள்களை இறக்குமதி செய்கின்றனர் என்ற தகவலை புதிய இளம் ஏற்றுமதியாளர்கள் "தேடுதல்' இணையதளங்களின் மூலமும் எளிதில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏற்றுமதியில் நம் கையை மீறிய சில சூழ்நிலைகள் உருவாகி அது ஏற்றுமதியைப் பாதிக்கக் கூடும். அந்த வகையில், இப்போது ரூபாயின் மதிப்பு உயர்ந்திருப்பது ஓர் இடர்பாடு ஆகும். கடந்த 16 மாதங்களில் எப்போதும் இல்லாத அளவுக்கு, ரூபாயின் மதிப்பு ரூ. 45.35 ஆக உயர்ந்துள்ளது. நீண்ட காலத்துக்குப் பிறகு, இப்போது அன்னிய நிறுவன முதலீட்டாளர்கள் இந்தியச் சந்தையில் அதிக அளவில் முதலீடு செய்துள்ளனர். கடந்த ஓராண்டில், 1,800 கோடி டாலர் அளவுக்கு அன்னிய நிறுவன முதலீடுகள் இந்தியாவுக்குள் வந்துள்ளன. இதுவே ரூபாயின் மதிப்பு உயர்வதற்கு காரணம்.

ரூபாயின் மதிப்பு உயருகையில், ஏற்றுமதியாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய தொகை குறைகிறது. மாறாக, ரூபாயின் மதிப்பு குறையும்போது, ஏற்றுமதியாளர்களுக்கு கூடுதல் தொகை கிடைக்கிறது. இது அனைவரும் அறிந்ததே.

÷நீண்ட இடைவெளிக்குப் பிறகு, ஏற்றுமதி அதிகரிக்கும் இத்தருணத்தில், ரூபாயின் மதிப்பு உயர்வதால் ஏற்றுமதியாளர்கள் ஏமாற்றம் அடைவதில் வியப்பில்லை.

அதேநேரம், பெட்ரோலியப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை இந்தியா இறக்குமதி செய்கிறது. இதைப் பார்க்கையில், ரூபாயின் மதிப்பு உயர்வதால், மத்திய அரசு செலுத்த வேண்டிய தொகை குறைகிறது. இது நாட்டுக்கு நன்மை. ஆக, ரூபாயின் மதிப்பு உயர்வதால், நன்மை, தீமை இரண்டும் உண்டு.

எனவே, பாரத ரிசர்வ் வங்கி, விரைவில் அறிவிக்க உள்ள, நிதிக் கொள்கை வாயிலாக, ரூபாயின் மதிப்பு மேலும் உயர்வதைத் தடுத்து நிறுத்துமா அல்லது சந்தை சக்திகளின் போக்குக்கு விட்டுவிடுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எது எப்படி இருப்பினும், தற்போது ஏற்றுமதியாளர்களுக்கு சாதகமாக உள்ள பல அம்சங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டு, ஏற்றுமதியாளர்களும், அரசும் முனைப்புடன் செயல்பட்டு, ஏற்றுமதியைப் பெருக்கிட வேண்டும் என்பதே இப்போதைய தேவை.

**மூலிகை விழிப்புணர்வு கருத்தரங்கம்**

First Published : 25 Jan 2010 05:33:22 AM IST
Last Updated : 25 Jan 2010 09:50:43 AM IST

வேதாரண்யம், ஜன. 24: வேதாரண்யத்தை அடுத்த ஆயக்காரன்புலம்-3 ஆம் சேத்தி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மூலிகை விழிப்புணர்வு கருத்தரங்கம் அண்மையில் நடைபெற்றது.

கருத்தரங்கத்துக்கு பள்ளி உதவித் தலைமையாசிரியர் பு. முனியாண்டி தலைமை வகித்தார். ஆசிரியர் மு. பரஞ்சோதி முன்னிலை வகித்தார்.

மூலிகை மருத்துவர்கள் என். சண்முகம், எம். சதாசிவம், இரா. கருணாநிதி, பா. மதியழகன் ஆகியோர் மூலிகை குறித்து விளக்கமளித்து பேசினர்.

நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு 1300 மூலிகைச் செடிகள் மற்றும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. நிறைவில் ஆசிரியர் கே. ஆறுமுகம் நன்றி கூறினார்.

**அம்பை உழவர் சந்தையில் 100 நாள்களில் 8 லட்சம் டன் காய்கறிகள் விற்பனை**

First Published : 27 Jan 2010 04:51:13 AM IST

அம்பாசமுத்திரம், ஜன. 26: அம்பாசமுத்திரம் உழவர் சந்தை திறக்கப்பட்டு 100 தினங்களில் 8 லட்சம் டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அம்பாசமுத்திரம் உழவர் சந்தை திறந்து செவ்வாய்க்கிழமையுடன் 100 நாள்களாயின. இதையொட்டி, உழவர் சந்தையில் 100-வது நாள் விழா, குடியரசு தின விழா ஆகிய இருபெரும் விழா நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினராக நகர்மன்றத் தலைவர் கே.கே.சி. பிரபாகரன் பங்கேற்று தேசிய கொடியேற்றி இனிப்பு வழங்கினார். உழவர் சந்தைக் கண்காணிப்பாளர் காஜாமைதீன், இளநிலை உதவியாளர் பொன்ராஜ்கண்ணன், நிர்வாக அலுவலர் ப. முருகேசன், உதவி நிர்வாக அலுவலர்கள் கணேசன், முத்துக்குமார், அப்துல்ஹமீது உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

உழவர் சந்தை திறந்து 100 நாள்களில் 8 லட்சம் டன் காய்கறிகள் விற்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ. 47 லட்சம். 2.5 லட்சம் பேர் உழவர் சந்தையில் காய்கறி வாங்கிச் சென்றுள்ளனர் என திருநெல்வேலி துணை வேளாண்மை இயக்குநர் வே. தங்கசாமிபாண்டியன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**29ல் விவசாயிகள் முறையீட்டு கூட்டம்**

First Published : 27 Jan 2010 01:14:33 AM IST

திருப்பூர், ஜன.26: திருப்பூர் வருவாய் கோட்டத்துக்கு உட்பட்ட திருப்பூர், பல்லடம், அவிநாசி தாலுகா விவசாயிகளின் பிரச்னைகளை தீர்ப்பது தொடர்பான விவசாயிகள் முறையீட்டுக் கூட்டம் திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (ஜன.29) காலை 11 மணிக்கு நடக்க உள்ளது.

இக்கூட்டத்தில் திருப்பூர் கோட்ட விவசாயிகள் தங்கள் பிரச்னைகள் குறித்து மனுக்கள் அல்லது நேரிலும் முறையிடலாம் என்று கோட்டாட்சியர் சையதுஹுமாயன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**தமிழகத்தில் மரபணு கத்தரிக்காய்க்கு தற்காலிக தடை**

ஜனவரி 27,2010,00:17 IST



சென்னை : "மரபணு மாற்றுக் கத்தரிக்காய் குறித்து அரசு முடிவெடுக்கும் வரை, அதை விற்கவோ, பயிரிடவோ அனுமதிக்கப்படாது' என, முதல்வர் தெரிவித்துள்ளார். தமிழக அரசு செய்திக் குறிப்பு: முதல்வர் கருணாநிதியை அவரது வீட்டில், பூவுலகின் நண்பர்கள் என்ற அமைப்பு, தமிழ்நாடு இயற்கை விவசாயிகள் சங்கம், பாதுகாப்பான உணவுக்கான கூட்டமைப்பு, பெண்கள் இணைப்புக் குழு ஆகியவற்றின் நிர்வாகிகள் சந்தித்து, மரபணு மாற்றுக் கத்தரிக்காயை தமிழகத்தில் அனுமதிக்கக் கூடாது எனக் கேட்டுக் கொண்டனர். முதல்வர் கருணாநிதி, அதுபற்றி அரசு அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்காது என்றுதெரிவித்தார்.மேலும், எந்தவொரு அதிகாரியும் தமிழக அரசு முடிவெடுக்கும் வரை, இதை விற்கவோ, பயிரிடவோ அனுமதிக்கக் கூடாது என்று கூறியிருப்பதாக அவர்களிடம் தெரிவித்தார். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவில் கடல் விவசாயம்ஏற்படுத்த மத்திய அரசு திட்டம்

ஜனவரி 27,2010,00:00 IST

ராமநாதபுரம்:உலக மீன்சந்தையில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சியை சமாளிக்க, இந்தியாவில் கடல் விவசாயத்தை ஏற்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.மூன்று பக்கம் கடலால் சூழ்ந்த தீபகற்ப இந்தியா, உலக பிரசித்தி பெற்ற கடல்களை கொண்டுள்ளது. இருந்தும், கடல் விவசாயத்தில் கத்துக்குட்டியாக இருப்பதால், உலக மீன்சந்தையில் தொடர்ந்து வீழ்ச்சியை சந்தித்து வருகிறது. 2008-09ல் உலகளாவிய மீன் விற்பனை ஐந்து லட்சம் கோடி ரூபாய். இதில், அதிக மீன்பிடி தொழில் கொண்ட இந்தியாவின் பங்கு வெறும் ஒன்பது ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே. அதே நேரத்தில், மிகச்சிறிய நாடுகளான தாய்லாந்தில் 20 ஆயிரம் கோடி ரூபாய், வியட்நாம் 15 ஆயிரம் கோடி ரூபாய் அன்னிய செலவானியை ஈட்டி உள்ளது.

இந்தியாவில் கடல் விவசாயம் இல்லாமல் போனதே, இந்த வேறுபாட்டிற்கு காரணமாகும். விலை தீர்மானிக்கும் முறையை கூட இங்குள்ள மீனவர்கள் பெறாமல் உள்ளனர். பல மீனவ கிராமங்களில் மீன்பிடிக்கான அடிப்படை வசதியே இல்லை. அப்படியிருக்கும் போது, அங்கு கடல் விவசாயம் செய்வது எப்படி? இது போன்ற பல கேள்விகள் மீனவர்கள் மத்தியில் எழுந்துள்ளன. இந்நிலையை போக்க, "கடல் விவசாயத்தை இந்தியா முழுவதும் அறிமுகம் செய்து, மீன்பிடி தொழிலின் அன்னிய செலவானியை பெருக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு,' கடல் மற்றும் மீன் சார்ந்த ஆராய்சியாளர்களுக்கு, மத்தியஅரசு அறிவுறுத்தியுள்ளது.

இதற்கான தனிக் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், பல கோடி ரூபாய் மதிப்பீடு தயாராகி வருகிறது. முதற்கட்டமாக, தமிழகத்தில் அறிமுகம் செய்யப்பட உள்ள இம்முயற்சி, படிப்படியாக கேரளா, குஜராத் உட்பட இந்தியாவின் பல பகுதிகளுக்கும் விரிவு செய்யப்பட உள்ளன. குளிரூட்டி பதப்படுத்தும் கருவி, நவீன மீன்பிடி தளம் போன்ற அத்தியாவசியத் தேவைகள், இந்த கடல் விவசாயம் மூலம் நிறைவேற்றப்படும். தமிழகத்தில் ராமநாதபுரம், கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் இதற்கான ஆய்வுகளும் நடந்து வருகின்றன. இதற்காக வெளிநாடுகளிலிருந்து பயிற்சியாளர்கள் இந்தியா வர உள்ளனர்.

## டெல்டாவுக்காக இதுவரை 163 டி.எம்.சி., நீர் திறப்பு:மேட்டூர் அணை நாளை மூடல்

ஜனவரி 27,2010,00:00 IST



மேட்டூர்:டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட நீர் வழக்கம் போல நாளை (ஜன., 28) மாலை 6 மணிக்கு நிறுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேட்டூர் அணை நீரின் மூலம் டெல்டாவில் திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை உட்பட 11 மாவட்டங்களில் 16.5 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. ஆண்டு தோறும் ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணை நீர்மட்டம் 90 அடிக்கு மேல் இருந்தால் டெல்டா பாசனத்திற்கு நீர் திறக்கப்படும்.ஜூன் 12ல் அணையின் நீர்மட் டம் 60 அடியாக இருந்தால் பாசனத்திற்கு நீர் திறக்கவில்லை. அதனால், குறித்தபடி ஜூன்12ல் நீர் திறக்கப்படவில்லை.டெல்டா மாவட்டங்களில் 3.50 லட்சம் ஏக்கர் நிலத்தில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்படும். ஜூன்12ல் நீர் திறக்கப்படாததால் 1.70 லட்சம் ஏக்கரில் மட்டுமே குறுவை சாகுபடி மேற்கொள்ளப் பட்டது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் அடைந்து மேட்டூர் அணை நீர்வரத்து அதிகரித்ததால், ஜூலை12 முதல் அணை நீர்மட்டம் அதிகரித்தது. எனவே, டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணை ஆக., 7ம் தேதி திறக்கப்படும் என தமிழக அரசு அறிவித்தது. ஆனால், ஜூலை 25ல் அணை நீர்மட்டம் 90 அடியை எட்டியது.டெல்டா பாசனத்திற்கு முன்னதாக நீர்திறக்க வேண்டும் என்ற விவசாயிகள் கோரிக்கை ஏற்று, முதல்வர் கருணாநிதி உத்தரவுபடி ஜூலை 28ல் டெல்டா பாசனத் திற்கு மேட்டூர் அணையில் இருந்து நீர் திறக்கப்பட்டது. பாசனத்திற்கு நீர் திறந்து வைத்த வேளாண் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம், "குறுவை சாகுபடி செய்யாமல் விடப்பட்ட 1.80 லட்சம் ஏக்கரில், சம்பா சாகுபடி செய்வதன் மூலம் நெல் உற்பத்தி சமன் செய்யப்படும்' என்றார்.

ஆண்டுதோறும் ஜூன் 12ல் மேட்டூர் அணையில் நீர் திறக்கப் பட்டு, ஜன., 28ல் நிறுத்தப்படும். அதன்படி நாளை மாலை 6 மணிக்கு, மேட்டூர் அணை டெல் டா பாசன நீர் நிறுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஜூன் முதல் நேற்று வரை மேட்டூர் அணைக்கு 199 டி.எம்.சி., நீர் வந்துள்ளது.டெல்டா பாசனத்திற்கு 163 டி.எம்.சி., நீர் திறக்கப்பட்டுள் ளது. கடந்த 2008 ஜூன் 12ல் நீர்மட்டம் 103 அடியாக இருந்ததால் குறித்தபடி ஜூன் 12ல் டெல்டா பாசனத்திற்கு நீர் திறக்கப்பட்டது. அதனால், 2008-09ம் ஆண்டில் டெல்டா பாசனத்திற்கு 192 டி.எம்.சி., நீர் வெளியேற்றப்பட்டது.கடந்த ஆண்டு தாமதமாக ஜூலை 28ல் டெல்டாவிற்கு நீர் திறந்ததால் கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் 29 டி.எம்.சி., நீர் குறைவாக திறக்கப்பட்டது. அதிகபட்சமாக கடந்த செப்டம்பரில் 55.344 டி.எம்.சி., நீரும், குறைந்த பட்சமாக கடந்த ஜூலையில் 2.75 டி.எம்.சி., நீரும் பாசனத்திற்கு திறக்கப்பட்டது.நேற்று மாலை 4 மணி நிலவரப்படி அணை நீர் மட்டம் 71.10 அடியாக இருந்தது. நீர் இருப்பு 40.089 டி.எம்.சி., அணைக்கு வினாடிக்கு 1,096 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 8,000 கன அடி நீர் சென்று கொண்டிருந்தது.

**கீரை, காய்கறிக்கு ரசாயன மருந்து : கடும் பாதிப்பு அபாயம்**

ஜனவரி 27,2010,00:00 IST



ரசாயன மருந்து தெளித்த சில மணி நேரத் தில், அறுவடை செய்யப் பட்ட காய், கீரைகள் விற்பனைக்கு வருகின்றன. இதனால், கடும் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

உடல் ஆரோக்கியத்திற்கான சைவ உணவுகளில், காய்கறி, கீரைகள் முக்கியமானவை. இவைகளை கொண்டு, பொரியல், அவியல், காய்கறி கூட்டு, சாம்பார் உள் ளிட்டவை செய்யப்படுகின்றன. உடலில் சத்து குறைபாடு உள்ளவர்கள், கர்ப்பிணிகள், சர்க்கரை நோயாளிகள் ஆகியோர், நாள்தோறும் காய்கறி, கீரை சாப்பிடவேண்டும் என, டாக்டர் கள் அறிவுறுத்துகின்றனர். தற்போது காய்கறிகள், கீரைகள் விளைவிக்க, அதிக அளவில் ரசாயன உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன் படுத்தப்படுகின்றன. பூச்சிக்கொல்லி மருந்து தெளித்த சில மணி நேரத் தில், காய்கறிகள், கீரைகள் விற்பனைக்கு வருகின்றன. கத்தரிக்காய், தக்காளி, வெண்டை, காலிப்ளவர், அவரைக்காய் போன்ற காய்களின் உள்ளே புகுந்து விடும் புழுக்களை கொல்ல, வீரியம் நிறைந்த பூச்சிக்கொல்லி மருந்துகளை விவசாயிகள் பயன்படுத்துகின்றனர்.

காய்கள், கீரைகள் நாள்தோறும் அறுவடை செய்ய வேண்டும்; இல்லையெனில், அவை முதிர்ந்து விடும். எனவே, காய்கள் மற்றும் கீரைகளிலுள்ள ரசாயன மருந்தின் மணம் மாறாத நிலையில், அறுவடை செய்யப்பட்டு, விற்பனைக்கு வருகின்றன. அதை வாங்கி சமைக்கப் படும் நிலையில், மருந்தின் வீரியம் குறையாமல் உட் கொள்ளப்படுகின்றன. தண்டு கீரை, சிறு கீரை, அரை கீரை, புதினா, கொத்தமல்லி, மணத்தக் காளி உள்ளிட்ட கீரைகள் செழித்து வளர, அளவுக்கு அதிகமான வகையில் யூரியா போடப்படுகிறது; கீரைகளின் தண்டு பகுதி, இலை பகுதியை பூச்சி, புழுக்கள் சேதபடுத்தாமல் இருக்க, வீரியமான ரசாயன பூச்சிக்கொல்லி மருந் துகள் தெளிக்கப்படுகின் றன. பூச்சிக்கொல்லி மருந் தின் மணம் வீசும் காய் மற்றும் கீரைகள் சாப்பிடுவதால், குடல் புண், வாயு தொல்லை, மூலம், மலச்சிக்கல் போன்ற தொந் தரவுகள் ஏற்பட்டுள்ளன.

தோட்டக்கலைத்துறை அலுவலர் ஒருவர் கூறியதாவது: வீரியம் குறைந்த பூச்சிக் கொல்லி மருந்துகளை அடித்தால், தற்போது இருக்கும் புழு, பூச்சிகள் இறப்பதில்லை. காய் மற்றும் கீரைகளுக்கு அதிக திறன் கொண்ட ரசாயன மருந்துகளை பயன்படுத்த வேண்டியுள்ளது. பூச்சிக்கொல்லி மருந்து அடித்த மூன்று தினங்கள் கழித்து, காய் மற்றும் கீரைகள் அறுவடை செய்ய வேண்டும். தற்போது, மருந்து அடிக்கப்பட்ட சில மணி நேரத்தில் அறுவடை செய்யப்படுகின்றன. பொதுமக்களின் ஆரோக்கியத்தை காப்பாற்ற, விற்பனைக்கு வரும் காய் மற்றும் கீரைகள் தர பரிசோதனை செய்து விற்க அனுமதிக்க வேண்டும். அதற்கு உழவர் சந்தை, காய்கறி மார்க்கெட் உள்ளிட்ட இடங்களில், தர பரிசோதனைக் கூடம் அமைக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அலுவலர் கூறினார்.

## அரிசி விலை மேலும் உயரும்: வியாபாரிகள் தகவல்

ஜனவரி 27,2010,04:28



தமிழகத்தில், வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில், மீண்டும் அரிசி விலை உயரும் என, வியாபாரிகள் தெரிவித்தனர். தமிழகத்தின் செஞ்சி, ஆரணி, கள்ளக்குறிச்சி, செங்கம், குடியாத்தம், திருவாரூர், செங்கல் பட்டு பகுதிகளில், உயர் ரக நெல் ரகமான பொன்னி அதிகளவில் விளை விக்கப்படுகிறது. இப்பகுதியில் விளைவிக்கப்படும் பொன்னி ரக நெல்லுக்கு, ஆகஸ்ட் மாதத்தில் விலை உயர்வு ஏற்படுவது வழக்கம். ஆனால், கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், விவசாயிகள் எதிர்பார்த்த அளவுக்கு, வெள்ளை பொன்னி நெல்லின் விலையில் உயர்வு ஏற்பட வில்லை. இதனால், செப்டம்பர் மாதம், விவசாயிகள் அதிகளவு பி.பி.டி., (பாபத்லால்) பொன்னி நெல்லை நடவு செய்தனர். குறைந்த அளவில் மட்டுமே வெள்ளை பொன்னி நெல் பயிரிட்டுள்ளனர். அவ்வாறு பயிரிடப்பட்ட நெற் பயிர்களின் அறுவடை தற்போது துவங்கி உள்ளது.

ஜனவரி முதல் வாரத்தில், தமிழக சட்டசபையில் நடந்த கவர்னர் உரையில், விவசாயிகள் விளைவிக்கும் நெல்லுக்கான ஆதார விலையில், குவிண்டாலுக்கு 50 ரூபாய் அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பு காரணமாக, அரசு கொள்முதல் நிலையங்களில், நெல் விலையில் ஏற்பட்ட உயர்வை தொடர்ந்து வெளி மார்க்கெட்டில் நெல் விலையில் உயர்வு ஏற்பட்டது. அத்துடன், கடந்த ஆண்டு தமிழகத்தில் பயிரிடப்பட்ட வெள்ளை பொன்னி நெல்லின் அளவை விட, நடப்பாண்டு விவசாயிகள் வெள்ளை பொன்னி நெல்லை பயிரிடப்பட்டுள்ள அளவு மிகவும் குறைவு என, வேளாண்மைத் துறையின் ஆய்வில் தெரிந்தது.

வெள்ளை பொன்னி நெல் பயிரிடப்படுவது குறைந்துள்ள நிலையில், தமிழகத்துக்கு அதிகளவில் வெள்ளை பொன்னி விற்பனைக்கு வரும் அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகாவில் தொடர்ந்து 'லெவி' அமலில் உள்ளது. இதனால், அங்கிருந்து வெள்ளை பொன்னி நெல்லை கொண்டு வர முடியாத நிலைக்கு வியாபாரிகள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால், வரும் மாதங்களில், தமிழகத்தில் வெள்ளை பொன்னி நெல்லுக்கு தட்டுப் பாடு ஏற்படும் என்பதால், வியாபாரிகள் அதிகளவில் கொள்முதல் செய்யத் துவங்கி உள்ளனர்.

இதனால், வெள்ளை பொன்னி விலையில், 75 கிலோ மூட்டைக்கு 100 முதல் 200 ரூபாய் வரை விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம், செஞ்சி, செங்கம் மார்க்கெட் கமிட்டியில், வெள்ளை பொன்னி புதிய நெல் 75 கிலோ மூட்டை 1,275 ரூபாய்க்கு விற்றது, தற்போது, மூட்டை 1,375 முதல் 1,500 ரூபாய் வரை விற்கிறது.

இதையடுத்து, குறைந்த அளவில் விற்பனைக்கு வரும் பி.பி.டி., (பாபத்லால்) பொன்னி நெல்லின் விலையில், எதிர்பார்த்த உயர்வு ஏற்பட வில்லை. பி.பி.டி., பொன்னி 75 கிலோ மூட்டை 1,150 முதல் 1,200 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. மார்க்கெட் கமிட்டியில் ஏற்பட்ட விலை உயர்வை தொடர்ந்து, வெளி மார்க்கெட்டிலும் வெள்ளை பொன்னி நெல் விலையில், மூட்டைக்கு 150 முதல் 250 ரூபாய் வரை விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. ஆனால், நடப்பாண்டில் அதிக அளவில் பி.பி.டி., பொன்னி பயிரிடப்பட்டு உள்ளதால், பிப்ரவரி

முதல் வாரத்தில் விற்பனைக்கு வரும் பட்சத்தில் பி.பி.டி., நெல்லின் விலையில் சரிவு ஏற்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. அதே நேரத்தில், வெள்ளை பொன்னியின் விளைச்சல் குறைந்துள்ளதால், அதன் விலையில் கடும் உயர்வு ஏற்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

சேலம் நெல் வியாபாரி ஒருவர் கூறியதாவது: நடப்பாண்டு, வெள்ளை பொன்னியை விவசாயிகள் குறைந்த அளவிலேயே பயிரிட்டுள்ளதால், பொன்னி நெல்லுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை மேலும்

உயரும். நெல் விலையில் உயர்வு ஏற்பட்டால் அதன் பாதிப்பு அரிசி விலையில் நிச்சயம் எதிரொலிக்கும். தற்போது, கிலோ 40 ரூபாய்க்கு விற்கப்படும் வெள்ளை பொன்னி, இன்னும் சில மாதங்களில் 50 ரூபாயை தொடும் என எதிர்பார்க்கிறோம். அவ்வாறு வெள்ளை பொன்னியின் விலை உயரும் பட்சத்தில், அதன் பிரதிபலிப்பு பி.பி.டி., உள்ளிட்ட அனைத்து ரக அரிசிகளின் விலையிலும் எதிரொலிக்கும். எனவே, வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில், தமிழகத்தில் மீண்டும் அரிசி விலை விஸ்வரூபம் எடுப்பது உறுதி. இவ்வாறு அவர் கூறினார்.

-நமது சிறப்பு நிருபர்-

**பழங்கள் விலை சரிவு: கொய்யா கிலோ ரூ.25**

ஜனவரி 27,2010,04:28



திண்டுக்கல்:வரத்து அதிகரிப்பு காரணமாக, திண்டுக்கல்லில் மாதுளை, ஆப்பிள் விலை குறைந்துள்ளது. கடந்த மாதம் ஒரு கிலோ 130 ரூபாய்க்கு விற்ற காபூல் மாதுளை 100 ஆகவும்,110க்கு விற்ற சாதாரண ரக மாதுளை 75 ரூபாயாகவும் குறைந்துள்ளது. ஒரு கிலோ 170 ரூபாயாக இருந்த வாஷிங்டன் ஆப்பிள் 120க்கும், 125 ரூபாயாக இருந்த சீனா ஆப்பிள் 100க்கும்,100 ரூபாயாக இருந்த ஐஸ்கிரீம் ஆப்பிள் 80க்கும் விற்கப்படுகிறது. திராட்சையில் பன்னீர் 25க்கும், பச்சை ரகம் 50க்கும், மஸ்கட் 70க்கும் விற்பனையாகிறது.

கொய்யா 25, ஆரஞ்ச் 40,அன்னாசி 35, சப்போட்டா 15 ஆகிய விலைகளில் உள்ளன. மலைவாழை தலா ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

**விளைபொருட்களை இருப்பு கிடங்கில் வைத்து கடன் பெறலாம்: கோட்ட வேளாண் அலுவலர்**

விருத்தாசலம் : விளைபொருளுக்கு விவசாயிகள் எதிர்பாக்கும் விலை கிடைக்காத போது இருப்பு கிடங்கில் வைத்து உடனடி தேவைக்கும் பொருளீட்டு கடன் பெறலாம் என விருத்தாசலம் கோட்ட வேளாண் அலுவலர் அமுதா தெரிவித்துள் ளார். இதுகுறித்து அவர் வி டுத்துள்ள செய்திக்குறிப்பு:விருத்தாசலம் மற்றும் திட்டக்குடி

தாலுக்காக்களில் தற்போது அதிக அளவில் நெல் அறுவடை நடந்து வருகிறது. ஒரே சமயத்தில் அதிகளவில் நெல் அறுவடைக்கு வரும் போது விலை குறைய வாய்ப்புள்ளது.
அறுவடை காலங்களில் விலை குறைவதால் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் உள்ள கிடங்கில் இருப்பு வைத்து எதிர்பார்க்கும் விலை கிடைக்கும் போது விற்கலாம். விளைபொருட்களை இருப்பு வைக்க கிடங்கி வசதி உள்ளது. இருப்பு வைப்பதால் விவசாயிகள் உடனடி பணத் தேவைக்கு பொருளீட்டு கடன் பெற வசதி உள்ளது. விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை 6 மாதங்கள் வரை இருப்பு வைத்து நல்ல விலை கிடைக்கும் சமயங்களில் விற்கலாம். இருப்பு வைக்கும் காலத்தில் விளைபொருளின் அன்றைய மதிப்பின் 50 சதவிகிதம் வரை பொருளீட்டு கடன் வழங்கப்படும். அந்த கடனுக்கு முதல் 15 நாட்களுக்கு எவ்வித வட்டியும் கிடையாது. ஆறு மாதங்கள் வரை இருப்பு வைத்து விற்க 5 சதவீத வட்டி மட்டுமே வசூலிக்கப்படுகிறது. எனவே விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி நல்ல விலை கிடைக்கும் காலங்களில் அதிக லபத்திற்கு விற்று பயனடைய கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

**ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விற்பனை குழு செயலாளர் ஆய்வு**

விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத் தில் கடலூர் விற்பனை குழு செயலாளர் ஆய்வு செய்தார்.விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத் தில் தற்போது நாளுக்கு நாள் நெல் மற்றும் தானிய வரத்துகள் அதிகரித்துள் ளது. சம்பா நெல் அறுவடை தீவிரமடைந்துள்ள நிலையில் நேற்று ஒரே நாளில் 15 ஆயிரம் நெல் மூட்டைகள் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் குவிந்தன. அதிகபட்சமாக பொன்னி நெல் மூட்டை ரூபாய் 1094 வரை விற்கப்பட்டது. மேலும் உளுந்து ரூபாய் 5099 , சோளம் மற்றும் வரகு ரூபாய் 879 என நல்ல விலைக்கு விற்பனையானது. இதனால் விவசாயிகள் அதிக அளவில் தங்கள் விளை பொருட்களை கொண்டு வருகின்றனர். கடலூர் விற்பனை குழு செயலாளர் அருள்பிரகாசம் நேற்று விற்பனை கூடத்தில் நெல் மூட்டைகளை ஆய்வு செய்தார். பின்னர் மூட்டை அடிக்கி வைக்கப்படும் இடங்களை ஆய்வு செய்தவர் விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார்.

**பூச்சி கொல்லி மருந்துகளை பாதுகாக்க பெட்டக வசதி**

காட்டுமன்னார்கோவில் : காட்டுமன்னார்கோவில் அருகே பூச்சிக் கொல்லி மருந்துகளை பாதுகாக்க பெட்டக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. காட்டுமன்னார்கோவில் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் விவசாயத்தை நம்பியே உள்ளது. இதனால் விவசாயிகள் தங்களது பயிர்களுக்கு தேவையான பூச்சி கொல்லி மருந்துகளை வாங்கி வீட்டிலும், வயல் களிலும் பாதுகாத்து விவசாய நிலங்களில் பயன்படுத்தி வருவது வழக்கம். சில சமயங்களில் குடும்ப சண்டை ஏற்படும் போது அதே வேகத்தில் வீடுகளில் வைத்திருக்கும் பூச்சி மருந்தை குடித்து குடும்பத்தில் உள்ளவர் கள் இறப்பது பல நேரங்களில் நடந்து வருகிறது. காட்டுமன்னார்கோவில் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இது போன்ற இறப்புகள் தொடர்ந்து வருகிறது. இது போன்ற சம்பவங் களை தடுக்கும் பொருட்டு பேனியல் தொண்டு நிறுவனம் சார்பில் காட்டுமன்னார்கோவில் அடுத்த கண்டமங்கலம் கிராமத் தில் முதல் முறையாக பூச்சி மருந்துகளை பாதுகாக்கும் பெட்டக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு 158 பெட்டகம் உள்ளது. இதில் விவசாயிகள் வைத்துக்கொள்ளலாம். தேவையானபோது எடுத்து யன்படுத்தலாம். இதனால் குடும்ப தகராறினால் நடக்கும் தற்கொலைகள் தவிர்க்கப்படும்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திண்டுக்கல்:திண்டுக்கல் மாவட்டத் தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நாளை நடைபெறும். விவசாயிகள் மனுக் கொடுக்கலாம். ஏற்கனவே கொடுத்த மனுக்களுக்கு பதில் அளிக்கப்படும்.

**அறுவடை முடிந்த வயலில் குரும்ப ஆடுகள் முற்றுகை ஆடு வளர்ப்போருக்கு தினமும் ரூ. 400 வருமானம்**

கோபிசெட்டிபாளையம்: கோபியில் அறுவடை முடிந்த வயல்களில் குரும்ப ஆடுகளின் மேய்ச்சல் தற்போது தொடங்கியுள்ளது. "கம்பளி" தயாரிக்க பயன்படும் ஆயிரக்கணக்கான குரும்ப ஆடுகள் கேரளா மற்றும் கோவை பகுதிகளில் இருந்து மேய்ச்சலுக்காக நல்ல சீதோஷ்ண நிலை கொண்ட கோபிக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ் பவானி பகுதிகளில் இரண்டாம் போக சாகுபடியில் பயிரிப்பட்டிருந்த நெல், கரும்பு மற்றும் மஞ்சள் ஆகிய பயிர்களின் அறுவடை துவங்கியுள்ளது. இதை தொடர்ந்து வரும் ஏப்ரல் மாதம் இரண்டாம் வாரத்தில் முதல் போக சாகுபடியை விவசாயிகள் ஆரம்பிக்க உள்ளனர். இடைப்பட்ட இரண்டரை மாத காலத்தில் நிலத்தை பதப்படுத்தும் வகையில் அடி உரமாக சணப்பையை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். மேலும் நிலத்துக்கு இயற்கையாகவே மாடு மற்றும் ஆடுகளின் கழிவுகளை நேரடியாக கொண்டு வர, கேரளா மற்றும் கோவை பகுதிகளில் இருந்து குரும்ப ஆடுகள் வரவழைக்கப்பட்டுள்ளன.

அறுவடை செய்யப்பட்ட நிலத்தில் பகல் நேரத்தில் குரும்ப ஆடுகள் மேய்ச்சல் முடிந்த பின்னர், இரவு நேரத்தில் அதே வயலில் தற்காலிகமாக போடப்பட்ட "பட்டி' யில் ஆடுகளை அடைக்க வேண்டும். இதன் ஆடுகளின் கழிவுகள் விவசாய நிலத்தில் நேரடியாக உரமாக கிடைக்கிறது. இதற்காக குரும்ப ஆடுகள் வளர்ப்பவர்களுக்கு ஒரு நாளைக்கு 400 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை வழங்கப்படுகிறது. மேலும், குரும்ப ஆடுகளின் முடியைக் கொண்டு கம்ப்ளி, மப்ளர், பெட்ஷீட் போன்றவை தயாரிக்கப்படுகிறது. ஒரு வயதில் குரும்ப ஆடுகளின் முடி வெட்டப்படுகிறது. 10 ஆண்டுகள் வரை ஆறு மாத இடைவெளியில் முடி வெட்டலாம். கம்பளி தயாரிக்க பயன்படும் நல்ல எடையுள்ள குரும்ப ஆடுகளின் முடிக்கு கிலோ 50 ரூபாய் வரை கிடைக்கிறது. கிராக்கி உள்ள நேரங்களில் 150 ரூபாய் வரை ஆடுகளின் முடிக்கு கிடைக்கிறது. 10 ஆண்டுகளுக்கு பின் இறைச்சிக்காக கேரளாவுக்கு குரும்ப ஆடுகள் கொண்டு செல்லப்படுகிறது. அங்கு ஆடுகள் வெட்டப்பட்டு, பதப்படுத்தப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தமிழகத்தில் கோவை, ஊட்டி, குன்னூர், கர்நாடகாவில் பெங்களூரு உள்ளிட்ட பகுதிகளில் ஆடுகளின் முடியை கொண்டு பெட்ஷீட் தயாரிக்கும் பணிகள் நடக்கிறது. மேலும் குரும்ப ஆடுகள் பிறந்து எட்டு நாளைக்குள் மூளை பகுதி மட்டும் அறுத்து எடுக்கப்பட்டு, வெறி நாய் கடிக்கு மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது. இதற்காக எட்டு நாள் கொண்ட குரும்ப குட்டி ஆடுகளுக்கு 800 ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கிறது. இதனால் மலைப்பகுதியை சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல், சமவெளி பகுதியை சேர்ந்த விவசாயிகளும் அதிக வருமானத்துக்காக குரும்ப ஆடுகளை அதிகளவில் வளர்க்கத் துவங்கியுள்ளனர்.

**உழவர் சந்தையில் பால் விற்பனை துவக்கம்**

கரூர்: வேலாயுதம்பாளை யம் உழவர்சந்தை சார்பில் வெளியிட்ட அறிக்கை: வேலாயுதம்பாளையம் உழவர் சந்தையில் காய்கள், பழங்கள், கீரை, வாழைத்தண்டு மற்றும் மலைக்காய்கள், உருளை கிழங்கு, கேரட், பீன்ஸ் போன்றவை மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது சந்தையில் பால் விற்பனை செய்து பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் இதை பயன்படுத்தி கொண்டு சந்தையில் பால் விற்பனை செய்யலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**விற்பனை வாய்ப்புள்ள நிரந்தர தொழில்:அலங்கார மீன்வளர்ப்பில் விழிப்புணர்வு தேவை**

மதுரை:மதுரையில் அலங்கார மீன்வளர்ப்புக்கான வாய்ப்புகள் அதிகமிருந்தாலும், விவசாயிகள், தனிநபர்களுக்கு மீன்வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு இல்லை.அலங்கார மீன்வளர்ப்பு மையமாக மதுரை விளங்குகிறது. சென்னையில் நவீன தொழில் நுட்பங்களுடன், ஆயிரக்கணக்கானோர் இத்தொழில் ஈடுபட்டுள்ளனர். அங்கு மீன் உற்பத்தியும் அதிகம். ஆனால் மதுரை மீன்களுக்கு தான் அதிக வரவேற்பு உள்ளது.
மதுரையில் நவீனத் தொழில்நுட்பங்கள் இதுவரை இல்லை. பாரம்பரிய முறையில் வளர்ப்பதோடு, நோய் தாக்கினால் மட்டுமே மருந்து தெளிக்கப்படுகிறது. இதனால் மீன்களின் ஆயுட்காலம் கூடுகிறது. தண்ணீரில்

உப்புச்சுவை குறைவாக இருப்பதால், மீன்களின் நிறம் நன்றாக இருக்கிறது. இதனால் கேரளா, கர்நாடகாவுக்கு, மதுரை மீன்கள் தான் அதிகளவில் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.
இவ்வளவு சிறப்பு வாய்ந்த அலங்கார மீன்வளர்ப்புத் தொழில் பற்றிய விழிப்புணர்வு மதுரையில் அதிகமாக இல்லை. குறைந்த எண்ணிக்கையில் தான் மீன்வளர்க்கின்றனர். அதுவும் மீன் குஞ்சுகளை வாங்கி, அவற்றை ஆறுமாதங்கள் வரை வளர்த்து, விற்பனை செய்கின்றனர். மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்தாலும், வளர்த்தாலும் நல்ல லாபம் தான்.

யார் தொழில் செய்யலாம் : குறைந்த பட்சம் ஒருஏக்கர் இருந்தால், முழுநேரத் தொழிலாக செய்யலாம். 5 அல்லது 10 சென்ட் இடமிருந்தால், பகுதிநேர தொழிலாக செய்யலாம். குறிப்பாக, விவசாயிகள் தங்கள் இடத்தின் சிறு பகுதியை, மீன்வளர்ப்புக்கு ஒதுக்கலாம். விவசாயத்துடன், கூடுதல் வருமானம் கிடைக்கும். மண் மற்றும் தண்ணீர் பரிசோதனை செய்வது முக்கியம். தண்ணீரின் தன்மையைப் பொறுத்தே, மீன்களின் வாழ்வு அமையும். தண்ணீர் சரியில்லை என்றாலோ, மண் சரியில்லை என்றாலோ, பெரிய பள்ளம் அமைத்து, அதில் "பாலித்தீன் ஷீட்' விரித்து தண்ணீரை நிரப்பலாம்.

இலவச பயிற்சி : ஆர்வமுடைய விவசாயிகள், தனிநபர்களுக்கு மீன்வளத்துறை மூலம் 10 நாட்கள் இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. மீன்வளர்த்தல், உணவளித்தல், இனப் பெருக்கம் செய்தல் ஆகியவை இலவச செய்முறை பயிற்சியுடன் விளக்கப்படுகிறது. 10 நாட்கள் பயிற்சிக்கு, உதவித்தொகையும் வழங்கப்படுகிறது.

மீன் வகைகள் : "கோல்டு', "பிளாட்டி', "பைட்டர்' உட்பட சிலவகை மீன்களை, எளிதில் இனப்பெருக்கம் செய்ய வைக்கலாம். ஆண், பெண் மீன்களை கண்டறிவது, கருவுற்ற மீன்களை கண்டறிதல் பயிற்சி தரப்படுவதால், இந்த மீன்களை வளர்ப்பதோடு, இனப் பெருக்கம் செய்ய வைக்கலாம். கவுரா, அரவானா போன்ற விலையுயர்ந்த மீன்களை, சாதாரணச் சூழலில் இனப்பெருக்கம் செய்ய வைக்க முடியாது. மீன் குஞ்சுகள், மதுரையில் உள்ள பெரிய விற்பனை நிலையங்களில் கிடைக்கின்றன. இவற்றை குஞ்சுப் பருவத்தில் வாங்கி, 3 - 6 மாதம் வரை வளர்த்து, விற்பனை செய்யலாம்.

நிரந்தர சந்தை : அலங்கார மீன்களுக்கு சந்தை வாய்ப்பு அதிகம். விற்பனை நுட்பம், மீன்வளத்துறை மூலம் கற்றுத் தரப்படுகிறது. பயிற்சி பெற்றதோடு, முறையாக மீன்களை வளர்த்தால், இத்தொழிலில் நஷ்டம் என்ற பேச்சுக்கு இடமில்லை. மீன்வளத்துறை துணை இயக்குனர் ஆறுமுகம் கூறுகையில், ""வெளிமாநிலம், வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் அளவுக்கு, நல்ல தொழில் வாய்ப்புள்ளது. நிலமில்லாதவர்கள், குத்தகைக்கு நிலத்தை எடுத்து மீன்வளர்க்கலாம். மானியமில்லாத வங்கிக்கடன் பெறலாம்,'' என்றார். மேலும் விவரங்களுக்கு, 0452 - 234 7200 ல் தொடர்பு கொள்ளலாம்.

**நாமக்கல்லில் தினசரி முட்டை விலை நிர்ணயம் 'நெக்' மண்டல தலைவர் அறிவிப்பு**

நாமக்கல்: "நாமக்கல்லில் தினசரி முட்டை விலை நிர்ணயம் செய்யப்படும்' என, தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் நாமக்கல் மண்டல தலைவர் செல்வராஜ் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: மும்பை, ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழகத்தில் உள்ள தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு மண்டலங்களின் தலைவர் மற்றும் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் அடங்கிய சிறப்பு கூட்டம் கடந்த 7ம் தேதி நடந்தது. தொடர்ந்து நாமக்கல் "மைனஸ்' பிரச்னையை முற்றிலுமாக நீக்கும் வகையில், தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர் சங்கம், நாமக்கல் கோழிப்பண்ணையாளர் பெடரேஷன், மண்டல முட்டை உற்பத்தியாளர் சொசைட்டியுடன் இணைந்து தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு சார்பில், கோழிப்பண்ணையாளர் மற்றும் முட்டை வியாபாரி சந்திப்பு கூட்டம் நேற்று முன்தினம் நாமக்கல்லில் நடந்தது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் விபரம்: நாமக்கல் "நெக்' விலை தான்; இனி மைனஸ் இல்லை என்பதை இந்த கூட்டம் கொள்கை அளவில் ஒப்புக்கொள்கிறது. நடைமுறைச் சிக்கல்களை கருத்தில் கொண்டு "நெக் மைனஸை' முற்றிலுமாக நீக்குவது என்ற முடிவை உடனடியாக எடுக்க முடியாது. அதற்கு பதில் தற்போதுள்ள மைனஸை படிப்படியாக குறைக்க முயற்சி மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டது. முட்டைக்கு ஒரே விலையை நிர்ணயிக்கும் கொள்கையை நடைமுறைப்படுத்தும் முதல் படியாக முட்டை விலையை 15 காசு குறைத்து 245 காசாகவும், வியாபாரிகளுக்கு 15 பைசா குறைத்து கோழிப்பண்ணையில் 230 காசுக்கும், ஏற்றுமதி செய்யப்படும் முட்டைகளுக்கு 20 காசு குறைத்து 225 காசாகவும் விற்கப்படும். முட்டைக்கு ஒரே விலை நிர்ணயிக்கும் தொடர் முயற்சியாக நேற்று என்.இ.சி.சி., அலுவலகத்தில் முட்டை விலை நிர்ணய ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடந்தது.

அதில் இப்போது வாரம் மூன்று முறை விலை நிர்ணயம் செய்வதை, இன்று (நேற்று) முதல் தினசரி முட்டை விலை நிர்ணயம் செய்யப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. விலை நிர்ணயக்கூட்டம் தினமும் மாலை 6 மணிக்கு நடக்கும். கூட்டத்தில் முடிவு செய்யும் விலையானது அடுத்த நாளுக்கானது. ஞாயிற்றுக்கிழமை விடுமுறையாதலால் சனிக்கிழமை வைக்கும் விலை மட்டும் ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை ஆகிய இரண்டு நாட்களுக்கானது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**'மரபணு கத்தரிக்காய்க்கு தடை'**

குன்னம்:குன்னம் அருகே உள்ள கீழப்புலியூர் ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடந்தது.ஊராட்சித்தலைவர் நடராஜன் தலைமை வகித்தார். வேப்பூர்ஒன்றிய துணைசேர்மன் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். ஊராட்சி துணைத்தலைவர் செல்வராஜ், ஒன்றிய ஆணையர் பொன் மனோகரன், விஏஓ படைகாத்து மற்றும் வார்டு உறுப்பினர்கள்,மகளிர்சுயஉதவிக்குழுவினர் கலந்துகொண்டனர்.
கூட்டத்தில் கலைஞர் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் கான்கிரீட் வீடு கட்டும் திட்டம் பற்றி மக்களுக்கு விளக்குவது, நூறுநாள் திட்டத்தின் கூலியைரூ.100 ஆக வழங்குவது, மரபணு கத்தரிக்காய்க்கு முதல்வர் கருணாநிதிஅனுமதி அளிக்கக்கூடாது என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.அறங்கவலர் துறைக்கு கண்டனம்: குன்னம் அருகே உள்ள எஸ். ஆடுதுறையில் சிறப்பு கிராம சபைகூட்டம் அதன் தலைவர் மலர்வண்ணன் தலைமையில் நடந்தது.

கூட்டத்தில் ஆடுதுறை குற்றம்பொறுத்தீஸ்வரர் கோயில் கும்பாபிஷேக விழாவை ஊராட்சி பிரதிநிதிகளுடன் கலந்துபேசாமல் நடத்தும் அறங்காவலர் துறைக்கு கண்டனம் தெரிவிப்பது, கலைஞர் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் கான்கிரீட்வீடு திட்டம் குறித்து பொதுமக்களுக்கு விளக்குவது என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் ஒன்றிய திட்ட ஆணையர் மனோகரன் மற்றும் வார்டுஉறுப்பினர்கள், மகளிர் சுயஉதவிக்குழுவினர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**உர உற்பத்தியாளர்கள் பதிவு சான்று பெற வலியுறுத்தல்**

ராமநாதபுரம்:உரங்களின் உற்பத்தியாளர்கள் வேளாண்துறையில் பதிவு சான்று பெற வேண்டுமென ராமநாதபுரம் வேளாண் இணை இயக்குனர் சத்தியமூர்த்தி தெரிவித்தார். அவரது அறிக்கை : மண்புழு உரம் மற்றும் நகர கம்போஸ்ட் போன்றவை அங்கக உரங்கள் எனப்படும். அசோஸ்பைரில்லம், பாஸ் போபேக்டீரியா, ரைசோபியம் போன்றவை உயிர் உரங்கள் ஆகும். அங்கக, உயிர் உரங்களுக்கு தர நிர்ணயங்கள் குறித்த அரசு உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது.
2008 மார்ச் முதல் உரங்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு வேளாண் துறை மூலம் தடையில்லா சான்று வழங்கப்பட்டு வருகிறது. யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ், காம்ளக்ஸ் உரங்களை போல அங்கக உரங்கள் மற்றும் உயிர் உரங்களும் உரக்கட்டுப் பாட்டு ஆணை 1985ன் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள், சுயஉதவிக்குழுக்கள், தனியார் அங்கக , உயிர் உர தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். வேளாண்துறையினரின் உரிமை பெற அந்தந்த வட்டார வேளாண் உதவி இயக்குனர்களை தொடர்பு கொள்ளலாம், என தெரிவித்தார்.

**பயிர் காப்பீடு திட்ட கணக்கெடுப்பில்...மாற்றம் தேவை கிராமம் வாரியாக ஆய்வு நடத்த எதிர்பார்ப்பு**

காளையார்கோவில்:பயிர் காப்பீடுதிட்டத்தில், பலஆண்டுகளுக்கு முன்உள்ள கணக்கெடுப்பு முறை கையாளப்படுவதால், பல விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைப்பதில்லை. கிராமம் வாரியாக கணக்கீடு நடத்த விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

வறட்சி, வெள்ளம் உள்ளிட்ட இயற்கை சீற்றங்களால், பாதிக்கப்படும் பயிர்களுக்கு, தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் மூலம் இழப்பீடு வழங்கப்படுகிறது.கணக்கீடு: தற்போது பிர்க்கா வாரியாக சேத மதிப்பு கணக்கிடப்படுகிறது. இக்கணக்கீட்டு முறையில், பாதிக்கப்படும் விவசாயிகள் முழுமையாக பயன் பெற முடியவில்லை என, ஆதங்கம் நிலவுகிறது.

புள்ளியியல், விவசாயம், வருவாய் துறை அலுவலர்கள் இணைந்து சேத மதிப்பை ஆய்வு செய்கின்றனர். ஒரு பிர்க்காவிற்கு 10 சர்வே எண்கள் மட்டும் தேர்வு செய்யப்பட்டு, ஆய்வுக்கு பின், இழப்பீடு அறிவிக்கப்படுகிறது.குளறுபடி: இதில், நல்ல விளைச்சல் கண்ட சில விவசாயிகளுக்கும் இழப்பீடு கிடைக்கிறது. ஆனால் பாதிக்கப் பட்ட பலருக்கு கிடைப்பதில்லை. கணக்கெடுப்பில் உள்ள குளறுபடியே இதற்கு காரணம் என விவசாயிகள் கூறுகின்றனர்.

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன் உள்ள உற்பத்தி முறை அடிப்படையில், ஆய்வு நடப்பதால் குளறுபடி ஏற்படுவதாக புகார் எழுந்துள்ளது. இம்முறையை மாற்றி, கிராமம் வாரியாக கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:கார்மேகம், குருந்தனி: பல ஆண்டுகளாக, நெல் கதிர்பிடிக்கும் நிலையில், தண்ணீர் இன்றி விளைச்சல் பாதிக்கிறது. பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்தும் பயன் இல்லை. கடந்த ஆண்டு, நெல் சாவியான பகுதிகளுக்கு, 27 சதவீதம் இழப்பீடு அறிவிக்கப்பட்டது. நல்ல விளைச்சல் கிடைத்த விவசாயிகளும், இதில் பயன் பெற்றனர்.

வரும் காலங்களில் பாதிப்புக்கு ஏற்றவாறு இழப்பீடு வழங்க வேண்டும்.சிவகுமார், புல்லுக் கோட்டை பாசன சங்க தலைவர்: கடந்த ஆண்டு, மறவமங்கலம் பிர்க்காவில் ஒரு சில கிராமங்களில் நன்றாக விளைந்தது. அந்த கிராமங்களிலும் இழப்பீடு வழங்கப்பட்டது. எந்த அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படுகிறது? என்ற தகவல் தெரிவிக்கப்படுவதில்லை.

நடப்பு ஆண்டில் வருவாய் கிராமம் வாரியாக, கணக்கெடுத்து பாதிக்கப் பட்ட நபர்களுக்கு இழப் பீடு வழங்க வேண்டும்.மெய்ஞானமூர்த்தி, மார்க்சிஸ்ட் ஒன்றிய செயலாளர்: பிர்க்கா அளவில் குறிப்பிட்ட வயலைமட்டும் தேர்வு செய்து, கணக்கிடுகின்றனர்.பல ஆண்டுகளுக்கு முன் உள்ள கணக்கீடு முறையை கைவிட வேண்டும். கிராம வாரியாக ஆய்வு செய்து, இழப்பீடு வழங்க வேண்டும்.

**மானிய விலையில் மின் மோட்டார்**

சிவகங்கை:விவசாயிகளுக்கு மானிய விலையில் மின்சார, ஆயில் மோட் டார்கள் வழங்கப்படுகிறது.விவசாய உதவி இயக்குனர் செந்தில்நாதன் அறிக்கை:தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ், மின்சார, நீர்மூழ்கி, ஆயில் மோட்டார்களுக்கு (5 முதல் 10 எச்.பி.,) 10 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும்.
சிட்டா, அடங்கல், சிறு குறு விவசாயிக்கான சான்று, ரேஷன் கார்டு நகல், இரு போட் டோக்கள், பண்ணை வரைபட ஆவணத்துடன், வட்டார விவசாய உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம். ஆதிதிராவிட சிறு, குறு விவசாயிகளுக்கு, முன்னுரிமை வழங்கப்படும். விபரரங்களுக்கு "98422 72186' என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பெரியாறு அணை நீர் மீண்டும் திறப்பு**

கூடலூர்:லோயர்கேம்ப் குடிநீர் பம்பிங் ஸ்டேஷன் பராமரிப்பு பணிக்காக நிறுத்தப் பட்டிருந்த பெரியாறு அணை நீர் மீண்டும் திறக்கப்பட்டது. லோயர்கேம்ப் அருகே பெரியாற்றில் இருந்து தண்ணீர் பம்பிங் செய்து கூட்டு குடிநீர் திட்ட தொட்டிகளில் சேகரித்து குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது.
பம்பிங் ஸ்டேஷனில் மணல் அடைத்துக் கொண்டதால் பராமரிப்பு பணிகள் செய்வதற்காக ஜனவரி 22 ல் பெரியாறு அணையில் இருந்து நீர் நிறுத்தப்பட்டது. நான்கு நாட்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டதால் கூடலூர், கம்பம், உத்தமபாளையம், காமயகவுண்டன்பட்டி ஆகிய ஊர்களுக்கு குடிநீர் சப்ளையில் சிக்கல் ஏற்பட்டது.

இந்நிலையில், நேற்று இப்பணிகள் முடிவடைந்து பெரியாறு அணையில் இருந்து நீர் திறக்கப்பட்டுள்ளது. பெரியாற்றில் இருந்து நீர் பம்பிங் செய்து விரைவில் குடிநீர் சப்ளை செய்யப்படும் என குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**அக்ரி கிளினிக் திறப்பு விழா**

போடி:போடி அருகே சில்லமரத்துப்பட்டி தொடக்க விவசாய கூட்டுறவு வங்கியில் மண்ணின் வளம் மற்றும் தொழில் நுட்ப கருத்துக்களை தெரிந்து கொள்ளும் வகையில் அக்ரி கிளினிக் திறப்பு விழா நடந்தது. லட்சுமணன் எம்.எல்.ஏ., தலைமை வகித்தார். மாவட்ட தொடக்க கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் திருமூர்த்தி, இணை இயக்குனர் நடராஜன், விவசாய உதவி இயக்குனர் ஜெகப்பிரியாபதி, விதைச்சான்று உதவி இயக்குனர் ராதாகிருஷ்ணன், ஒழுங்கு முறை விற்பனை கூட விவசாய துணை இயக்குனர் ராசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். விவசாய தொடக்க கூட்டுறவு வங்கி செயலாளர் ராஜா நன்றி கூறினார்.

**விவசாயிகள் சங்க ஆலோசனை கூட்டம்**

ஸ்ரீவைகுண்டம்:ஸ்ரீவைகுண்டம் அருகே விவசாயிகள் சங்க ஆலோசனை கூட்டம் நடந்தது.ஸ்ரீவைகுண்டம் அருகே உள்ள மீரான்குளம், தேர்க்கன்குளம், வசவப்பநேரி பகுதி விவசாயிகள் சங்க ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு வசவப்பநேரி நீர்பாசன சங்க தலைவர் கணேசன் தலைமை வகித்தார். தமிழ்நாடு விவசாய சங்க பிரதிநிதிகள் கந்தசாமி, பள்ளிவாசன், ஜெயராஜ், பால்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் வசவப்பநேரி அருகில் கட்டப்பட்டு வரும் தனியார் கிரசர் கம்பெனியை பொதுமக்கள், விவசாயிகள் நலன்கருதி தடை செய்ய வேண்டும் எனவும், இது சம்பந்தமாக அதிகாரிகளிடம் முறையீடு செய்வது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
கூட்டத்தில் நடவடிக்கை குழு தலைவராக கந்தசாமி, துணை தலைவராக பெருமாள், டி.ஜெயராஜ், செயலாளராக கணேசன், துணை செயலாளராக வரதராஜன், பஞ்.,உபதலைவர் கணபதி, பொருளாளராக நல்லதம்பி, கௌரவ

தலைவராக ராஜகனி, சாது, சாதர்சிஸ், மீரான்குளம் பஞ்.,தலைவர் மற்றும் நிர்வாககுழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**விதைக்கிராம பயிற்சி முகாம்**

திருவெறும்பூர்: திருவெறும்பூர் வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் ஒட்டக்குடி கிராமத்தில் விதைக்கிராம பயிற்சி முகாம் நடந்தது. முகாமிற்கு கீழமுல்லைக்குடி பஞ்சாயத்து தலைவர் ரமேஷ் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் ரவி முன்னிலை வகித்து, "தரமான விதை உற்பத்தி' குறித்து பேசினார். வேளாண் அலுவலர் உஷாராணி "நஞ்சை தரிசில் உளுந்து சாகுபடி முறை' குறித்து பேசினார். உதவி விதை அலுவலர் சின்னப்பாண்டி விதைப்பண்ணை பற்றி கூறினார். பயிற்சி ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர்கள் சரவணன், திருக்குமரன், ஜனார்த்தனம், இசபெல்லா ஆகியோர் செய்திருந்தனர். வேளாண் உதவி அலுவலர் அமல்ராஜ் நன்றி கூறினார்.

**மரக்கன்றுகள் நடும் திட்டம்: என்.ஐ.டி.,யில் துவக்கிவைப்பு**

திருவெறும்பூர்: திருச்சி துவாக்குடியிலுள்ள தேசிய தொழில்நுட்ப கழகத்தில் (என்.ஐ.டி.,) மரக்கன்றுகள் நடும் திட்டம் துவக்கப்படடுள்ளது. துவாக்குடியில் ஐ.டி.,யில் நடந்த குடியரசு தினவிழாவில் என்.ஐ.டி., இயக்குனர் சிதம்பரம் தேசியக் கொடியேற்றி, கல்லூரி என்.சி.சி., மாணவ, மாணவிகளின் ஆயுதம் தாங்கிய அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். விழாவில் தமிழ்நாடு என்.சி.சி., திருச்சி மண்டல சார்ஜெண்ட் சுபீஷ், கார்ப்போரல் லோகநாதன், என்.ஐ.டி., பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் உட்பட பலர் பங்கேற்றனர். கொடியேற்றத்துக்கு பின் விழாவுக்கு வந்திருந்த அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. குடியரசு தின வாழ்த்துக்களை மாணவர்களும், பேராசிரியர்களும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டனர்.

கல்லூரி என்.சி.சி., மாணவர்கள் சார்பில் என்.ஐ.டி., வளாகத்தில் 150 மரக்கன்றுகள் நடும் திட்டத்தை என்.ஐ.டி., இயக்குனர் சிதம்பரம் துவக்கிவைத்து பேசியதாவது: "குடியரசு தினவிழாவின் கொண்டாட்டத்தின் முக்கிய நோக்கமே மக்கள் ஜாதி, மத வேறுபாடுகள் இல்லாமல் ஒற்றுமையோடு வாழவேண்டும். நாட்டில் வறுமையை ஒழிக்க அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபட வேண்டும். கல்லூரியில் நடப்படும் மரக்கன்றுகளை தினமும் தண்ணீர் ஊற்றி நன்கு பராமரிக்க வேண்டும். இல்லாவிட்டால் அதை நட்டு வைத்ததற்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும். நாட்டில் உள்ள ஒவ்வொருக்கும் தேசப்பற்று கண்டிப்பாக இருக்கவேண்டும்' என்றார்.

**பருத்தி சாகுபடி தொழில்நுட்பம்: விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

முசிறி: முசிறியில் வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு பருத்தி சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி முகாம் திண்ணக்கோணம் பஞ்சாயத்தில் நடந்தது. முகாமிற்கு வேளாண் அலுவலர் கலைவாணி வரவேற்றார். திண்ணக்கோணம் பஞ்சாயத்து தலைவர் அன்பழகன் த்ன்னிலை வகித்தார்.

வேளாண் உதவி இயக்குனர் ஜெயபாலன் தலைமை வகித்து பருத்தி சாகுபடி பற்றிய தொழில் நுட்ப பயிற்சி முகாமினை துவக்கி வைத்து பேசியதாவது: முசிறி கோட்டத்தில் உள்ள 11 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு ஒவ்வொரு கிராமத்திலும் 50 விவசாயிகளுக்கு நெல் பயிர் வகைகள், எண்ணெய் வித்துகள், சிறுதானியங்கள் உற்பத்தி, தொழில்நுட்ப பயிற்சி, விதை கிராம திட்டத்தின் கீழ் வழங்கப்பட உள்ளதாக கூறினார். விழாவில் திண்ணக்கோணம் பகுதியைச் சேர்ந்த சுமார் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயிற்சி பெற்றனர். பருத்தி சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றிய பல்வேறு சந்தேகங்களுக்கு வேளாண் அலுவலர்கள் ஆலோசனை வழங்கினர்.

முகாமில் வேளாண் உதவி அலுவலர்கள் கல்பனா ராணி, சிவக்குமார், ராஜா, ராஜகோபால், தனராமன் உட்பட வேளாண் அலுவலர்கள் பங்கேற்றனர். துணை வேளாண் அலுவலர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

**விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்**

திருவள்ளூர் : மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 29ம் தேதி திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளா கத்தில் நடைபெறும் என கலெக்டர் வெ.பழனிக் குமார் தெரிவித்துள்ளார்.திருவள்ளூர் மாவட்டத் தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடைபெற்று வருகிறது. அதன் படி இம்மாதத்திற் கான கூட்டம் வரும் 29ம் தேதி காலை 10.30 மணிக்கு கலெக்டர் அலுவலக வளா கத்தில் நடைபெறும்.கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் வெ.பழனிக் குமார் தலைமை தாங்குவார். அப்போது மாவட்டத் தில் உள்ள வேளாண்மை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண் பொறியியல், மீன்வளம், கால்நடை, மண் வள பாதுகாப்பு, வேளாண் விற்பனை மற்றும் இதர வேளாண் துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்துகொள்வர்.

கூட்டத்தில், விவசாயிகள் திரளாக கலந்துகொண்டு தங்கள் குறைகளை தெரிவித்தால் சம்பந்தப்பட்ட அலுவலர் கள் மூலம் அக்குறைகளுக்கு தீர்வு காணப்படும்.எனவே, விவசாயிகள் குறை  தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

**மாவட்டத்தில் விவசாயிகள் நலனிற்காக நெல் கொள்முதல் நிலையங்கள் துவக்கம்**

விழுப்புரம் : விழுப்புரம் மாவட் டத்தில் விவசாயிகள் நலனிற்காக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன.இது குறித்து கூட்டுறவு சங்க இணைப் பதிவாளர் மலர்விழி விடுத்துள்ள செய்திக்குறிப்பு: விழுப்புரம் மாவட்டத் தில் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நெல் கொள்முதல் செய்யும் பணிகள் துவக்கப் பட்டுள்ளன. திருக்கோவிலூர்(04153 252349), கள்ளக் குறிச்சி(04151 222329), திண்டிவனம் (04147 222767), செஞ்சி(94420 68490) கூட்டுறவு சங்கங்கள் மூலமும், மற்றும் அ.பாண் டலம், திருவெண்ணைநல்லூர், சித்தலிங்கமடம், திருநாவலூர், உளுந்தூர் பேட்டை, மணலூர் பேட்டை, அரசம்பட்டு, கே.அரியலூர், சீர்பனந் தல், வளவனூர், கொங்கம் பட்டு, காணை, பிரம்மதேசம், செஞ்சி, சாத்தாம்பாடி, மேல்வயலாமூர், மிட்டாமண்டகப்பட்டு, ஆலம் பூண்டி, கண்டமானடி, ஜி.செம்மேடு, உண்ணாமனந்தல் ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட் டுள்ளன.இதன் மூலம் நெல் குவிண்டால் சன்னரகம் (100 கிலோ) 1100 ரூபாய் வீதம், பொது ரகம் நெல் குவிண்டால் 1050 ரூபாய் வீதம் கொள்முதல் செய் யப்படுகிறது.இந்த சேவை குறித்து குறைகள் இருப்பின் இணைப்பதிவாளர் விழுப் புரம் 04146 222289, துணை பதிவாளர் திண்டிவனம் 04147 222812, திருக்கோவிலூர் துணை பதிவாளர் 04153 252349 ஆகிய எண்களில் தெரிவிக்கலாம் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உளுந்துக்கு இலை வழி உரமிடல் வேண்டும் பேராசிரியர் ராமமூர்த்தி வேண்டுகோள்**

திண்டிவனம் : உளுந்து பயிரில் பூ எடுக்கும் சமயத்தில், இலை வழி உரமிடல் வேண்டும் என எண் ணெய்வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய தலைவர் பேராசிரியர் ராமமூர்த்தி கூறியுள்ளார்.இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப் பில் கூறியிருப்பதாவது;

விழுப்புரம் மாவட்டத் தில் தற்போது உளுந்து அதிக பரபரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. நீர் வள திட்டப்படி உளுந்து சாகுபடியை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் ஊக்குவிக்கிறது.மேலும் உளுந் தில் உயர் விளைச் சலை அடைய விவசாயிகளுக்கு தக்க ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட் டத்தில் 47 ஆயிரம் ஏக்கர் பரபரப்பளவில் உளுந்து சாகுபடி செய்யப்பட் டுள் ளது. தற்போது உளுந்து பயிர் பூ எடுக்கும் தருவாயில் உள்ளது. இந்த சமயம் உளுந்திற்கு, இலை வழி உரமிடல் வேண்டும். இலை வழி உரமாக டி.ஏ. பி.,கரைசல் தெளிப்பது விளைச்சலை அதிகப்படுத்தும். இதன் மூலம் 20 சதவீதம் மகசூல் அதிகமாகும். இவ்வாறு பேராசிரியர் ராமமூர்த்தி கூறியுள்ளார்.

**வத்திராயிருப்பு பகுதியில் நெல் அறுவடைமுடிந்தது போதிய மழையின்மையால் மகசூல் குறைவு**

வத்திராயிருப்பு:வத்திராயிருப்பு பகுதியில் போதிய மழையின்மையாலும், கண்மாய்களில் வறட்சி நிலவியதாலும் பெரும்பாலான விவசாயிகள் நடவு செய்யவில்லை. இதனால் காலமுறை நெல் அறுவடை சீசன் முன்னதாகவே முடிவடைந்தது.

விருதுநகர் மாவட்டத்தின் நெற்களஞ்சியமான வத்திராயிருப்பு பகுதியில் இந்த ஆண்டு கால நடவுக்கான அறுவடை சீசன் கடந்த மாதம் துவங்கியது. மழை மிகவும் குறைவாகவே பெய்ததால் இப்பகுதியில் உள்ள ஒரு சில கண்மாய்களில் மட்டும் நீர் பெயரளவிற்கு இருந்தது. மற்ற கண்மாய்கள் தொடர்ந்து வறண்ட நிலையிலேயே இருந்தன.

இங்கு பிளவக்கல் அணை மூலம் பாசன வசதிபெறும் 40 கண்மாய்களில் 10 கண்மாய்களுக்கு மட்டுமே அணையில் நீர் இருந்தது.மற்ற கண்மாய்களில் வறட்சியான நிலை இருந்ததால் வத்திராயிருப்பிற்கு கிழக்கே உள்ள விவசாய நிலங்களில் இந்த ஆண்டு நெல் நடவுப்பணிகள் ஏதும் நடைபெறவில்லை. பிளவக்கல் அணை, கூமாப்பட்டி, கான்சாபுரம், சேதுநாராயணபுரம், வத்திராயிருப்பு ஆகிய இடங்களில் மட்டுமே நெல் நடவுப்பணிகள் நடந்தது. தைப்பொங்கல் கொண்டாட்டங்களுக்கு பிறகும் அம்மாதம் முழுவதும் நீடிக்கும் நெல் அறுவடை பணிகள் இந்த ஆண்டு பொங்கல் கொண்டாட் டங்களுடன் முன்னதாகவே முடிவடைந்தது. வயல்கள், தோப்புகளுக்கு மத்தியில் நடவு செய்து இதுவரை அறுவடை செய்யமுடியாதவர்கள் நிலங்களில் ஈரப்பிடிப்பு காரணமாக அறுவடை செய்ய முடியாதவர்கள் மட்டும் கடந்த சில நாட்கள் முன்புவரை அறுவடை செய்துவந்தனர். அதுவும் தற்போது முற்றிலுமாக முடிவடைந்து விட்டது.

பல விவசாயிகள் அடுத்த நடவுக்காக இப்போதே நாற்றுப்பாவி விட்டனர். குறைந்த அளவே விவசாயம் நடந்ததால் இந்த ஆண்டு மகசூலும் கணிசமாக குறைந்துவிட்டது. இதனால் நெல் விலை 72 கிலோ டீலக்ஸ் ரகம் மூடை ஒன்று 1100 லிருந்து 1250 வரை தரத்திற்கேற்ப உயர்ந்துள்ளது.

**வேளாண் அதிகாரிகள் வருவதில்லை ஒன்றியக் கூட்டத்தில் புகார்**

நரிக்குடி:நரிக்குடி ஊராட்சி ஒன்றியக் குழு கூட்டத் திற்கு வேளாண் துறை அதிகாரிகள் சரியாக வருவதில்லை என ஒன்றியக் குழு கூட்டத்தில் கவுன்சிலர் புகார் கூறினார். நரிக்குடி ஊராட்சி ஒன்றியக் கவுன்சிலர்கள் கூட்டம் யூனியன் அலுவலகத்தில் நடந்தது.

ஒன்றியத் தலைவர் சுந்தரி தலைமை வகித்தார்.துணைத் தலைவர் மீனாட்சி முன்னிலை வகித்தார். மாவட்ட கவுன்சிலர் போஸ், ஆணையர் ராஜேந்திரன், யூனியன் அலுவலர்கள் கலந்து கொண்டனர். கவுன்சிலர்கள் பேசியதாவது:
முகமது யூசுப்:வீரசோழன் முத்துராணி கண்மாய் கரையில் பெண்கள் கழிப் பறை கட்ட வேண்டும்.
ஆணையர்:அதற்கான நிதி ஒதுக்கி நடவடிக்கை எடுக்கப்படும்.
அழகம்மாள்: பிள்ளையார்குளம் ஊராட்சி உயர் நிலைப்பள்ளியில் இரவில் பொருட்கள் திருடு போவதால் அங்கு இரவுக் காவலரை நியமிக்க வேண்டும்.

ஆணையர்: கல்வி அதிகாரியிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

மீனாட்சி: நாலூர் சமுதாயக்கூடம் மிகவும் சேதமடைந்துள்ளது.

ஆணையர்: பராமரிப்பு நடவடிக்கை எடுக்கப்படும்.

குமராயி: நரிக்குடி ஒன்றியக் குழு கூட்டத்திற்கு வேளாண் துறை அதிகாரிகள் சரியாக வருவதில்லை.இதனால் அரசு திட்டங்கள் எதுவும் தெரிவதில்லை. வறட்சி பகுதியான நரிக்குடி ஒன்றியத்தில் குடிநீர் திட்டப்பணிகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என அனைத்து கவுன்சிலர்களும் பேசினர்.

---

**கறவை மாடுகளில் மடி நோய்** ஜனவரி 26,2010,10:54 IST



மடி நோய்க்கான காரணங்கள்: மடி நோய் ஏற்பட நிறைய காரணங்கள் இருப்பினும் வெவ்வேறு வகையான நுண்ணுயிர்க்கிருமிகளால் ஏற்படும் பாதிப்பு மிகவும் அதிகமாக உள்ளது. நோய்க்கிருமிகள் மாட்டின் மடியிலுள்ள பால் சுரப்பினைத் தாக்கி பெருத்த பொருட்சேதத்தை ஏற்படுத்துகின்றன. தரையின் சுத்தம், மடியின் சுத்தம், பால் கறப்பவரின் கையின் சுத்தம் பால் கறக்கும் இயந்திரத்தின் சுத்தம் போன்றவைகளைப் பொறுத்து இந்நோய் வருகிறது. ரத்தம் மூலமாகவோ அல்லது காம்பின் துவாரம் மூலமாகவோ இந்நோய் மடியை அடைந்து மடிநோயை ஏற்படுத்துகிறது. மேலும் மடியில் ஏற்படும் காயம், புண் போன்றவைகள் இந்நோய் ஏற்படக் காரணமாக அமைகின்றன.

நோயின் அறிகுறிகள்:

* நோய் பாதிக்கப்பட்ட மடியின் பாகம் பெரிதாக வீங்கி சிவந்து காணப்படும். பொதுவாக ஒன்று அல்லது இரண்டு காம்புப் பகுதிகள் பாதிக்கப்படுகின்றன.

* வீக்கமுற்ற மடி சூடாகவும், தொட்டால் மாட்டிற்கு மிகவும் வலியுடன் இருக்கும். மாடு மடியைத் தொடவிடாது உதைக்கும்.

* பாதிக்கப்பட்ட காம்பில் மற்ற காம்புகளை விட பாலின் அளவு குறைந்து காணப்படும்.

* பால் திரிதிரியாகவும், மஞ்சள் நிறமாகவும், ரத்தம் கலந்தும், சீழ் கலந்தும் வரும்.

* நோயின் தன்மை அதிகமாகி விட்ட நிலையில் மடியின் பாதிக்கப்பட்ட பாகம் கெட்டியாக மாறி பால் சுரக்கும் தன்மையை முழுதுமாக இழந்து விடும்.

சிகிச்சை முறைகள்: மடி நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து மருத்துவம் செய்யாவிட்டால் மடியின் பால் சுரப்பி நிரந்தரமாகக் கெட்டு பால் சுரக்கும் தன்மையை இழந்து விடுவதால் பாதிக்கப்பட்ட மடியை குணப்படுத்துவது இயலாத காரியமாகி விடும். எனவே நோய் அறிகுறிகள் தென்பட்டதும் உடனே பாதிக்கப்பட்ட மாட்டை பிரித்து கால்நடை மருத்துவரை அணுகி தகுந்த நுண்ணுயிர்க் கொல்லி மருந்தினை பயன்படுத்தி நோயை விரைவில் குணப்படுத்தலாம்.

தடுப்பு முறைகள்:

1. தொழுவத்தை சாணம், சிறுநீர் தேக்கம் இல்லாதவாறு எப்பொழுதும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். தொழுவத்தின் தரையை கிருமி நாசினி மருந்து கொண்டு நன்கு கழுவ வேண்டும். அயொடொபார், சோடியம் ஹைப்போ குளோரைட், குளோர்ஹெக்சிடின், போன்ற மருந்துகளை கிருமி நாசினி மருந்துகளாக பயன் படுத்தலாம்.

2. பால் கறப்பவர்கள் பால் கறப்பதற்கு முன் தங்களது கைகளை சோப்பு போட்டு நன்கு சுத்தம் செய்துவிட்டு கிருமி நாசினி மருந்தில் கையை கழுவிய பிறகே பால் கறக்க வேண்டும்.

3. பால் கறப்பதற்கு முன்னும், பால் கறந்த பிறகும் பொட்டாசியம் பெர்மாங்கனேட் இடப்பட்ட தண்ணீரில் மடியைக் கழுவ வேண்டும். ஒரு லீட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் என்ற அளவில் பொட்டாசியம் பெர்மாங்கனேட் இட வேண்டும்.

4. பால் கறக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்தும் பொழுது, பால் கறந்தவுடன் குளிர் நீரில் நன்கு கழுவிய பிறகு கிருமி நாசினி மருந்து கொண்டு நன்கு சுத்தம் செய்ய வேண்டும்.

5. காம்பு, மடிப் பகுதியில் காயம் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். காயம் ஏற்பட்டால் சிறிய காயமாக இருக்கும்பொழுதே மருந்து போட்டு குணப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் காயங்களின் வழியாக கிருமிகள் உட்சென்று மடிநோயை ஏற்படுத்திவிடும்.

6. கறவை நேரத்தை ஒழுங்காகக் கடைப்பிடிக்க வேண்டும். மடியில் பால் தேங்கக்கூடாது. பாலை முற்றிலும் கறந்து விட வேண்டும்.

7. சினை மாட்டின் மடியை தினமும் கண்காணிக்க வேண்டும்.

8. கறவைக் காலம் முடிந்தவுடன் காம்பிற்குள் கால்நடை மருத்துவர் உதவியுடன் நுண்ணுயிர்க் கொல்லி மருந்தினை செலுத்த வேண்டும்.

9. நோயுற்ற பசுவை இறுதியில் கறக்க வேண்டும். மேலும் நோயுற்ற காம்பை இறுதியில் கறக்க வேண்டும். கறந்த பாலை கிருமி நாசினி மருந்துடன் கலந்து அப்புறப்படுத்த வேண்டும்.

10. அடிக்கடி மடி நோய் வரும் மாடுகளை பண்ணையிலிருந்து நீக்கி விட வேண்டும்.

- இரா.உமாராணி , பூ.புவராசன் மற்றும் பா. முருகானந்தன், 0452 - 248 3903.

சின்னச்சின்ன செய்திகள் ஜனவரி 26,2010,10:52 IST





குளிர் காலத்தில் வான்கோழி வளர்ப்பு: தென்னை, மலர்த் தோட்டம், பழத் தோட்டங்கள் மற்றும் தரிசு நிலங்கள், வேளாண் பயிர் தோட்டங்கள், காய்கறி மார்க்கெட் உள்ள இடங்கள் வான்கோழி வளர்ப்புக்கு சாதகமான இடங்கள். வான்கோழி வளர்ப்பில் ஏற்படும் முக்கிய பிரச்னை குளிர் காலங்களில் வரும் அம்மை நோயாகும். குஞ்சு

பொரித்து 21-22 நாளில் அம்மைநோய் தடுப்பு ஊசியும், மூன்றாவது மாத வயதில் ஒரு தடுப்பு ஊசியும் போடவேண்டும்.

ஊசிபோட இயலாதவர்கள் சுத்தமான வேப்பெண்ணெயை ஒரு தட்டில் ஊற்றி சிறிது மஞ்சள் தூளை கலந்து அம்மை கொப்புளங்கள் உள்ள இடங்கள் மற்றும் தலை, இறக்கையின் உட்புறம், கால் விரல்கள் ஆகிய பகுதிகளில் நன்கு தடவிவிட வேண்டும். காலை உணவு, நீர் கொடுத்த பின்பு தடவ வேண்டும். இதை தொடர்ந்து 15 நாட்கள் தடவுவது மிக நல்லது.

கொட்டகையில் உச்சி வெயில் நேரங்களில் வேப்ப இலையை அரைத்து 5 லிட்டர் நீருக்கு திருப்பதி லட்டு சைசில் எடுத்து நீரில் கரைத்து, கொட்டகையின் தரை, உட்புற சுவர்கள், மேற்கூரைகள், வெளிப்புறம், அனைத்து பாகங்களிலும் நன்கு தெளிக்க வேண்டும். அவரவர் தேவைக்கேற்ப இக்கலவையைக் கலந்து பயன்படுத்தலாம். தெளிக்கும் போது கொட்டகையில் கோழிக்கு உணவு, நீர் இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

முயல் வளர்ப்பு: லாபகரமான தொழிலாக தொடர்வதற்கு சில நுட்பங்களைத் தெரிந்துகொள்வது அவசியம். முயல் வளர்ப்பைத் தொடங்குவதற்கு முன் அதற்கான விற்பனை வாய்ப்பு எங்கு உள்ளது என்று கண்டுபிடிக்க வேண்டும். சென்னை, கோவை, புதுச்சேரி போன்ற பகுதிகளில் முயல்கறிக்கு தேவை உண்டு. இப்பகுதியில் உள்ள உணவகங்களில் முயல் கறியை வாங்கிச் செல்கிறார்கள். முயல் வளர்ப்பை தொடங்கும் முன் அது குறித்த அடிப்படை அறிவு வேண்டும். நாமக்கல்லில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் முயல் வளர்ப்புக்கு பயிற்சி கொடுக்கிறார்கள். தொடர்புக்கு: இணை பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் அறிவியல் நிலையம், கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகம், நாமக்கல்-637 002. 04286-266 345, 266 244. மனோகரன்: 90035 58908.

சிறு தொழில் திட்டங்கள்: பாக்கு மட்டையிலிருந்து தட்டுகள், கப், கலைப்பொருட்கள் உற்பத்தி திட்டம் மற்றும் தரமான பாக்கு மட்டைகள் வினியோகம், உற்பத்திக்குப் பின் சந்தைவாய்ப்பு, பயிற்சி, தரமான இயந்திரங்கள்; வாழையிலிருந்து நார் மற்றும் கைவினைப் பொருட்கள் உற்பத்தித் திட்டம், தேனீ வளர்ப்பு மற்றும் அனைத்து திட்டங்களுக்கும் அணுக வேண்டிய முகவரி: எக்கோ கிரீன் யூனிட், 44, டிவைன் ஸ்ரீ லட்சுமி நகர், கணபதி (அஞ்சல்), கோயம்புத்தூர்-641 006. 0422-437 6397, 98944 22180, 99525 85689, 92452 01733, 97505 43945. -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

### சுற்றுப்புற சூழலுக்கு ஏற்ற டிரைலர்கள் ஜனவரி 26,2010,10:50 IST



பொள்ளாச்சியில் உள்ள கண்ணப்பன் சுற்றுப்புற சூழலுக்கு ஏற்ற துருபிடிக்காத அலுமினியம் பாடி கொண்ட குப்பை சேகரிக்கும் டிரைலர் உருவாக்கி உள்ளார். இந்த டிரைலர் ஆனது தமிழக ஊராட்சி பஞ்சாயத்து,

நகராட்சிகளுக்கு உபயோகமாக உள்ளன. இதன் சிறப்பு அம்சம் என்னவென்றால் மக்கும் குப்பை மக்காத குப்பை என இருவேறு கழிவுகளுக்கும் தனித்தனி அறைகள் உள்ளன. சேறும் சகதியும், நீரும் வடிகின்ற கழிவு குப்பைகளாக இருந்தாலும், டிரைலர் செல்லும் இடங்களிலும், கழிவுநீர் வழிந்து துர்நாற்றம் மாசு ஏற்படுத்தாத வகையில் டிரைலர் துளைகள் ஏற்படுத்தி அதன் மூலம் கழிவுநீர் கீழே உள்ள கேன்களில் சேகரமாகும். கழிவு கொட்டும் இடத்தில் நீரையும் திறந்து கொட்டிவிடலாம். குப்பை பறந்து கொட்டிவிடாத அளவுக்கு மூடியும் கொண்டது. அரசு துறைக்கு மட்டுமல்லாது தனியார் தொழிற்சாலைகளிலும் பயன்படுத்த ஏற்றது. இவை தவிர பவர் டில்லர், டிரைலர்கள், மினி டிராக்டருக்கு ஏற்ற மினி டிரைலர்கள் உள்ளன. மூவாயிரம் முதல் ஆறாயிரம் வரை கொள்ளவு கொண்ட டேங்கர்கள் இவரிடத்தில் உள்ளன. இவை தவிர 2, 3, 5, 8, 12 லீ டன் என அளவு கொண்ட டிப்பர் மற்றும் டிப்பர் இல்லாத டிரைலர்கள் உள்ளன. இதுதவிர 20 டன் எடை தாங்கும் பிளாட்பாம் டிரைலரும் உள்ளன. இது தமிழக அணைக்கட்டுகளின் நீர் மட்டத்தை துல்லியமாக அளக்க பயன்படுத்தப்படும் நவீன கணிப்பொறி இயந்திரங்களுடன் கூடிய படகுகளை எடுத்துச் செல்லவும், நிறுத்தி வைக்கவும் பயன்படுவதோடு பல்வேறு தொழிற்சாலை இயந்திரங்களையும் எடுத்துச் செல்ல மிக உதவியாக உள்ளன.

உழவுக்கருவிகளை பொறுத்தவரை குழி எடுக்கும் ஹோல்டிக்கர் தொடங்கி 1 டன் கல்டிவேட்டர், ஸ்பிரிங் டைப் கல்டிவேட்டர், டக்புட் கல்டிவேட்டர், லெவலர், ரோட்டோ வேட்டர் மற்றும் விவசாயத்திற்கான அனைத்துக் கருவிகளும் இவ்விடத்தில் உள்ளன.

தொடர்பு : ஏ.டி.கண்ணப்பன், 04259 - 229 311; 94862 45420.
-கே.சத்தியபிரபா, 4/164, எஸ்.எஸ்.காலனி, உடுமலை.

நவீன தொழில்நுட்பம் ஜனவரி 26,2010,10:48 IST



மல்பெரியில் (பப்பாளி) மாவுப்பூச்சி மேலாண்மை: மல்பெரியை தாக்கி வரும் துக்ரா (இளஞ்சிவப்பு மாவுப்பூச்சி), இலைப்பேன், தத்துப்பூச்சி, சுருள்வெள்ளை ஈ, பிணைக்கும் புழு போன்றவை தாக்கி வந்தாலும் தற்பொழுது பப்பாளி மாவுப்பூச்சி தாக்குதல் கோவை, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் அதிகளவில் உள்ளது. பார்ப்பதற்கு சிறிய அளவிலான இம்மாவுப்பூச்சி மஞ்சள் நிறத்துடனும் இவற்றின்மீது மாவு போன்ற படலமும் காணப்படும்.

தாக்குதலினால் ஏற்படும் அறிகுறிகள்: இலையின் நுனிப்பகுதி முதலில் பாதிக்கப்படுகிறது. பின்னர் அவற்றின் தாக்குதல் அதிகரித்து மற்ற பகுதிகளுக்கும் அடிப்பகுதி வரை பரவுகிறது. பாதிக்கப்பட்ட செடிகள் உருமாறி காணப்படும். இவற்றின் தாக்குதல் அதிகமாக இருந்தால் செடியின் வளர்ச்சிகுன்றி காணப்படும். இலைகள் மஞ்சள் நிறமாக காணப்படும். மாவுப்பூச்சிகள் தேனி போன்ற திரவத்தை வெளியிடுவதால் இலைகள் மீது கரும்பூசணம் படர்ந்து இலையின் ஒளிச்சேர்க்கை பாதிக்கப்படுகிறது. இவற்றின் தாக்குதலுக்கு உதவும் எறும்புகள் பாதிக்கப்பட்ட

செடிகளில் அதிகமாக காணப்படும். தாக்குதல் அதிகமாக உள்ள செடிகள் மஞ்சள் நிறமாக மாறி காய்ந்து மடிந்துவிடும்.

தாக்குதலுக்கான காரணங்கள்: குறுகிய வளர்ச்சிக்காலம் (3 முதல் 4 வாரங்கள்). அதிக இனப்பெருக்கம் செய்யும் திறன்; இப்பூச்சியின் மேல் மாவு போன்ற பாதுகாப்பு கவசம் காணப்படும். இவை பூச்சிக்கொல்லிகள் ஊடுருவுவதை தடுத்துவிடும். ஆண் பூச்சிகளின் துணை இல்லாமலே இனப்பெருக்கம் செய்யும் திறன் கொண்டவை. பல பயிர்களைத் தாக்கும் திறன் கொண்டவை.

மாவுப்பூச்சியை கட்டுப்படுத்தும் முறைகள்: மல்பெரியில் தாக்குதல் இருக்கிறதா என்று தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட செடிகளை சேகரித்து எரித்துவிட வேண்டும். தேவையற்ற களைகளை அகற்றி அழித்துவிட வேண்டும். இம்மாவுப்பூச்சி தாக்குதலின் ஆரம்ப காலத்தில் பாதிக்கப்பட்ட செடிகளுக்கு மட்டும் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தினால் போதுமானது. கவாத்து செய்தபின் புரோபோனபாஸ் - 2 மிலி/ லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கைத்தெளிப்பான் கொண்டு நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும். கட்டைப்பகுதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மண் நனையுமாறு தெளிப்பது மிகவும் அவசியம். 15 நாட்கள் கழித்து தேவைப்பட்டால் டைகுளோர்வாஸ் 2 மிலி/லிட்டர் என்ற அளவில் தெளிக்கலாம். சிறந்த கட்டுப்பாடு பெற இவற்றுடன் வேம்பு மருந்துகளான வேப்பெண்ணெய் 20 மிலி/லிட்டர் (அ) வேப்பங்கொட்டைச்சாறு 0.5 சதவீதம் (அ) அநாடிராக்டின் (10,000 பி.பி.எம்) 1மிலி/லிட்டர் தண்ணீர் (அ) மீன் எண்ணெய் சோப் 25 கிராம்/ லிட்டர் என்ற அளவில் பயன்படுத்த வேண்டும்.

பின் இரண்டாம் தெளிப்பு முடிந்து ஒரு வாரம் கழித்து கிரிப்டோலெமஸ் (அ) ஸ்கிம்னெஸ் பொரிவண்டுகளை ஏக்கருக்கு 250-300 என்ற எண்ணிக்கையில் வெளியிட வேண்டும். நீல வண்ணத்துப்பூச்சி, ஸ்டால்ஜிஸ் இபியஸின் புழுப்பருவம் அனைத்து மாவுப்பூச்சியின் பருவங்களையும் அதிகளவில் உண்ணும் திறன் உடையது. இவ்வுண்ணிகளின் நடமாட்டம் அதிகமிருப்பின் பூச்சி கொல்லி மருந்து தெளிப்பதை தவிர்க்க வேண்டும். (தகவல்: சி.ஏ.மகரலிங்கம், எஸ்.சுரேஷ், ரா.சண்முகம், பட்டுப்புழுவியல் துறை, த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003).

தினகரன்

**அரிசி மொத்த விலை சரிவு**

பதிவு செய்த நாள் 1/27/2010 12:45:44 AM



காரைக்குடி : ஆலைகளுக்கு நெல் வரத்து அதிகரிப்பால், அரிசி மொத்த விலையில் மூட்டைக்கு ரூ.300 வரை சரிந்துள்ளது. ஆனால், வெளிமார்க்கெட்டில் அரிசி விலை குறையவில்லை.
தமிழகத்தில் சென்னை ரெட்ஹில்ஸ், காரைக்குடி புதுவயல், காங்கேயம், ஆரணி, விக்கிரவாண்டி, செஞ்சி பகுதிகளில் அதிகளவில் அரிசி ஆலைகள் உள்ளன. குறிப்பாக, காரைக்குடி அருகே புதுவயல் பகுதியில் 142 நவீன அரிசி ஆலைகள் உள்ளன.

இவற்றுக்கு தஞ்சாவூர், ஆவுடையார்கோவில், காஞ்சிபுரம் மற்றும் கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் இருந்து நெல், அரவைக்கு வருகிறது. அதிசய பொன்னி, டீலக்ஸ் பொன்னி அரிசி ரகங்கள் அதிகமாக அரவை செய்யப்படுகிறது. இங்கிருந்து புதுக்கோட்டை, கோவை, மதுரை, காங்கேயம், பல்லடம், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களுக்கு அரிசி செல்கிறது.

கடந்தாண்டு துவக்கத்தில் புதுவயல் ஆலைகளுக்கு நெல்வரத்து அதிகமாக இருந்தது. தினமும் சராசரியாக 12 ஆயிரம் நெல் மூட்டைகள் வந்தன. தென்மேற்கு பருவமழை பொய்த்ததால், கடந்த அக்டோபரில் நெல் வரத்து 8 ஆயிரம் மூட்டையாக குறைந்தது. அரிசி விலை உயர்ந்ததற்கு இதுவும் முக்கிய காரணம்.
தற்போது புதுவயல் ஆலைகளுக்கு தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, பேராவூரணி உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து அதிகளவில் நெல் மூட்டைகள் வந்து கொண்டிருக்கின்றன. தினமும் சுமார் 15 ஆயிரம் மூட்டை வரத்து உள்ளது.

அதனால், 100 கிலோ டீலக்ஸ் பொன்னி அரிசி ரூ.3,400ல் இருந்து ரூ.3,100 ஆகவும்,  டீலக்ஸ் பொன்னி 2வது ரகம் ரூ.3,100ல் இருந்து ரூ.2,900 ஆகவும், அதிசய பொன்னி ரூ.2,700ல் இருந்து 2,600ஆகவும் சரிந்துள்ளது. ஆனால், வெளிமார்க்கெட்டில் டீலக்ஸ் பொன்னி கிலோ ரூ.38 ஆகவும், 2வது ரகம் கிலோ ரூ.34 ஆகவும், அதிசய பொன்னி கிலோ ரூ.31 ஆகவும் தொடர்ந்து நீடிக்கிறது. ஆலைகளில் அரவை செய்யப்பட்டு டீலக்ஸ் பொன்னி அரிசி மூட்டைகள் தேங்கி கிடக்கின்றன.  இதுகுறித்து, நெல் கொள்முதல் செய்யும் வியாபாரி கூறுகையில், Ôகடந்த ஆண்டு துவக்கத்தில் 61 கிலோ டீலக்ஸ் பொன்னி நெல் மூட்டைகள் ரூ.1100 ஆக இருந்தது. டிசம்பரில் ரூ.1140 ஆக உயர்ந்தது. தற்போது அரிசி தேக்கம் அடைந்துள்ளதால் 61 கிலோ டீலக்ஸ் பொன்னி நெல் மூட்டை ரூ.950 ஆக சரிந்துள்ளளது. வெளிமார்க்கெட்டில் விலை குறையாததற்கு வியாபாரிகள்தான் காரணம்Õ என்றார்.
இந்நிலையில், வெளிமார்க்கெட்டில் அரிசி விலையை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென என பொதுமக்கள் கோருகின்றனர்.

தினத் தந்தி DAILY THANTHI

**அரசு முடிவு எடுக்கும் வரையில்**

**மரபணு கத்தரிக்காயை விற்கவோ, பயிரிடவோ அனுமதிக்கக் கூடாது**

**அதிகாரிகளுக்கு முதல்–அமைச்சர் கருணாநிதி கண்டிப்பான உத்தரவு**

சென்னை, ஜன.27–

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி. கத்தரிக்காயை, அரசு முடிவு எடுக்கும் வரையில் விற்கவோ, பயிரிடவோ அனுமதிக்கக் கூடாது என்று அதிகாரிகளுக்கு முதல்–அமைச்சர் கருணாநிதி கண்டிப்பான உத்தரவிட்டு உள்ளார்.

மாறுபட்ட கருத்து

பயோடெக்னாலஜி (உயிரிதொழில்நுட்பம்) அடிப்படையில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட புதிய உணவுப்பயிர்கள் சமீப காலமாக உலகின் பல்வேறு பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இவை, பூச்சிகளால் அதிகம் தாக்கப்படுவதில்லை என்றும், அதிக மகசூலை தருகின்றன என்று ஒரு கருத்தும் பரவலாக நிலவி வருகிறது.
ஆனால், இயற்கை உணவை ஆதரிப்பவர்கள், மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவு வகைகள், சுகாதாரக் குறைபாட்டை ஏற்படுத்தும், விவசாயிகளை பெருமளவில் பாதிக்கும் என்றும் குரல் கொடுத்து வருகிறார்கள். இந்த நிலையில், தமிழகத்தில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட 'பி.டி.கத்தரிக்காய்' ரகத்தை அறிமுகம் செய்வது பற்றிய பேச்சு எழுந்துள்ளது. இதற்கு ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.
எதற்காக எதிர்ப்பு?

பி.டி. கத்தரிக்காயை எதிர்ப்பது ஏன் என்பது பற்றி, 'பூவுலகின் நண்பர்கள்' அமைப்புத் தலைவர் டாக்டர் சிவராமன் கூறியதாவது:–

மரபணு மாற்ற பயிர்களால் மனிதர்களுக்கு அலர்ஜி, நோய் எதிர்ப்புசக்தி குறைவு போன்ற பிரச்சினை ஏற்படும். அதில் உள்ள மகரந்தம் காற்றில் பறந்து கலந்தால், நமது பாரம்பரிய காய்கறிகளும் நாளடைவில் அழிந்துவிடும்.

மேலும், விவசாயிகள் தற்போது அடுத்த பருவத்துக்கு பயிரிடுவதற்குத் தேவையான விதைகளை தங்களிடமே வைத்துள்ளார்கள். ஆனால், மரபணு விதைகள் வந்தால், அவர்கள் கடையில் விலை கொடுத்தே விதைகளை வாங்க வேண்டும். விவசாயிகளின் விதை உரிமை பறிபோகும். பி.டி. கத்தரிக்காயை அனுமதித்தால், அடுத்து, அரிசி, தக்காளி போன்றவற்றுக்கும் இதே நிலை வரும். அவற்றுக்கான விதைகளை தனியார் நிறுவனத்திடம் மட்டுமே வாங்க வேண்டிய நிலை ஏற்படும். மரபணு கத்தரிக்காயை ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்பட 9 மாநிலங்கள் தடை செய்துள்ளன.

இவ்வாறு சிவராமன் தெரிவித்தார்.

கோரிக்கை

இந்தநிலையில், விவசாயிகள், நுகர்வோர், டாக்டர்கள், சினிமா துறையினர், மகளிர் அமைப்பினர் என பலதரப்பினர் இணைந்து உருவாக்கியுள்ள பாதுகாப்புக்கான உணவுக்கான கூட்டமைப்பின் பிரதிநிதிகள், முதல்–அமைச்சர் கருணாநிதியை சந்தித்தார்கள். தமிழகத்தில் மரபணு மாற்று கத்தரிக்காயை அனுமதிக்கக் கூடாது என்று முதல்–அமைச்சரிடம் அவர்கள் கோரிக்கை மனு கொடுத்தார்கள்.
இதைத் தொடர்ந்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டு இருப்பதாவது:–

கருணாநிதி உத்தரவு

முதல்–அமைச்சர் கருணாநிதியை அவரது இல்லத்தில், 'பூவுலகின் நண்பர்கள்' அமைப்புத் தலைவர் டாக்டர் சிவராமன், தமிழ்நாடு இயற்கை விவசாயிகள் சங்கத் தலைவர் செல்வம், நிர்வாகி டாக்டர் ஜீவானந்தம், பாதுகாப்பான உணவுக்கான கூட்டமைப்பின் அமைப்பாளர்கள் நடிகை ரோகிணி, சங்கீதா, ராம் மற்றும் தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழுத் தலைவர் ஷீலு ஆகியோர் சந்தித்து, தமிழ்நாட்டில் மரபணு மாற்று கத்தரிக்காயை அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டனர்.
அவர்களின் மனுவினை ஏற்றுக்கொண்ட முதல்–அமைச்சர் கருணாநிதி, அது பற்றி அரசு அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்காது என்றும், வேளாண்மைத்துறை அமைச்சர் இது குறித்து சட்டப்பேரவையில் விளக்கமாகக் கூறி உள்ளார் என்றும் சுட்டிக்காட்டியதுடன், எந்தவொரு அதிகாரியும் தமிழக அரசு முடிவெடுக்கும்

வரையில், இதனை (பி.டி.கத்தரிக்காய்) விற்கவோ, பயிரிடவோ அனுமதிக்கக்கூடாது என்று கூறியிருப்பதாக அவர்களிடம் தெரிவித்தார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.